விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 25
ஒலி 136 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 20 வெள்ளிக்கிழமை (03.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

**போதை வர்த்தகம் ரூ 9 கோடி பெறுமதியான சொத்துக்கள் மன்னாரில் முடக்கம்**

5ஆம் பக்கம் பார்க்க

## பெண்ணின் எலும்புக்கூடு புங்குடுதீவில் மீட்பு

### நிறைவுக்கு வந்தது அகழ்வுப் பணி



(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணியின்போது பெண்ணொருவரின் மனித எலும்புக்கூடு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 15

## லிட்ரோ எரிவாயு விலை குறைப்பு

(கொழும்பு)

உள்நாட்டு எரிவாயு கொள்கலன்களின் விலையைக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

நடைமுறையில் 4,115 ரூபாயாக காணப்படும் 12.5 கிலோகிராம் 15

## சடலமாக மீட்கப்பட்ட கணவர் உயிர்மாய்த்த மனைவி

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் ஆணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கணவனின் சடலத்தை பார்த்ததும், மனைவியும் நஞ்சருந்தி உயிர்மாய்த்துள்ளார்.

நெடுங்கேணி, கீரிசுட்டான் பகுதியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றது.

கீரிசுட்டான் பகுதியில் அரைக்கும் ஆலையொன்றை நடத்தி வந்த ஒருவரே வெட்டுக் காயங்களுடன் 15

### சுற்றுலாவிகளுக்கு ஏற்றாற்போல

## யாழ்.கோட்டையை மேம்படுத்தத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் முக்கிய சுற்றுலாத் தலமாக காணப்படும் கோட்டையை, சுற்றுலாப் பயணிகளின் தேவைக்கு ஏற்றாற்போல மாற்றியமைப்பதற்கான புதிய திட்டங்களை வகுக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம்.சார்ள்ஸ் பணிப்புரை விடுத்துள்ளார். 15

### அதிகாரங்களை அரசு பகிர வேண்டும்


# தமிழர்களின் அபிலாஷை பூர்த்தி செய்யப்படவில்லை

### யாழ்.விஜயம் தொடர்பில் எரிக் சொல்ஹெய்ம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அபிலாஷைகள் இன்னும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இலங்கை அரசு அதிகாரங்களை பகிர வேண்டும் என இலங்கைக்கான முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



### வட மாகாணத்தில்

## அதிகளவான வெப்பம் இன்று உணரப்படும்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் அதிகளவான வெப்பம் இன்று உணரப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடக்கு, வடமத்திய மாகாணங்கள் மற்றும் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் சில இடங்களில் வெப்ப சுட்டெண் மனித உடலில் உணரப்படும் வெப்பநிலை "அதிக 15

## 'இந்த நாடு சிங்கள மக்களுக்கு மாத்திரம் உரியது'

### கொழும்பில் சுற்றுலாப் பேருந்தில் எழுதப்பட்ட வாசகத்தால் பரபரப்பு




(கொழும்பு)

கொழும்பில் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்லும் ஆடம்பர பேருந்து ஒன்றின் பின்பக்கத்தில் "இந்த நாடு சிங்கள மக்களுக்கு மாத்திரமே உரியது" என்ற இந்த வாசகம், ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு பத்திரிகையாளர் ஒருவர் புகைப்படம் எடுத்து அதை முகநூலில் 15

## பல இலட்சம் பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன்

### வவுனியாவில் ஒருவர் கைது

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில்பல இலட்சம்பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவரை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதன்போது 50கிராம் ஐஸ் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் செட்டிகுளம் பகுதியினை சேர்ந்த 36 வயதுடைய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப் பட்ட போதைப்பொருளின் 15

### அச்சுவேலிப் பகுதியில்

## இரண்டு வீடுகள் மீது வன்முறைக் கும்பல் தாக்குதல்

### சகோதரர்கள் உட்பட மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அச்சுவேலி பகுதியில் இரண்டு வீடுகள் மீது வன்முறை கும்பலொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

வன்முறைச்சம்பவம்தொடர்பாக சகோதரர்கள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டனர்.

அச்சுவேலி - சங்கானை வீதியில் 15

### சட்டவிரோத மீன்பிடி

## வடமராட்சியில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடற்பகுதியில் வெற்றிலைக்கேணி கடற்படையினர் நேற்று மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக ஒளிபாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட முயன்ற மூவர் கைது 15

### காரைநகர் தனியார் சிற்றூர்தி சங்கத்தினர்

## ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வழித்தட அனுமதிகள் விற்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து காரைநகர் தனியார் சிற்றூர்தி சங்கத்தினர் இன்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதோடு ஆளுநர் அலுவலகத்தையும் முற்றுகையிட்டு கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 40 வருடங்களாக காரைநகர் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்தாபிதம்
1945.05.31

பதிவு இல
HA/S/JA/419

## அருள்மிகு தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோவில்

## வருடாந்த வெளிமடை உற்சவம் - 2024

அம்பாள் அடியார்களே!

நிகழும் குரோதி வருடம் சித்திரைத்திங்கள் 27ஆம் நாள் (10.05.2024) வெள்ளிக்கிழமை மேற்படி உற்சவம் பின்வரும் ஒழுங்கில் நடைபெறவுள்ளது.

**விளக்கு வைப்பு**

03.05.2024 வெள்ளிக்கிழமை காலை பூசையுடன் நடைபெறும்.

**மடைப்பண்டம் எடுத்தல்**

10.05.2024 வெள்ளிக்கிழமை பி.ப 5.00 மணி பூசையினைத் தொடர்ந்து இடம்பெறும்.

**வெளிமடைப்பூசை**

11.05.2024 சனிக்கிழமை காலைப்பூசையுடன் நடைபெறும்.

**8ம் மடை**

17.05.2024 வெள்ளிக்கிழமை மாலைப்பூசையுடன் நடைபெறும்.

காவடி, கரகம், பாற்செம்பு, கற்பூரச்சட்டி போன்ற நேர்த்திக்கடன்களை மேற்கொள்ளும் அடியார்கள் 10.05.2024 வெள்ளிக்கிழமை காலை 06.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை மேற்கொள்ளலாம்.

மு.குறிப்பு : கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை. கடைகள் வைப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில்
தரும பரிபாலனசபை

(C-0259)

## தமிழர்களின்...

யாழ் விஜயம் தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் எரிக் சொல்ஹெய்ம், அதில் மேலும் கூறியிருப்பதாவது,

சுமார் இருபது ஆண்டுகளின் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருப்பதானது என்னை மிகவும் நெகிழ்ச்சியடையச்செய்திருக்கின்றது. இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் பலமுறை நான் இங்கு வந்திருக்கின்றேன். சிங்களவர்கள் மற்றும் தமிழர்களின் எனது நெருங்கிய நண்பர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

தற்போது வட இலங்கை சமாதானத்தை அனுபவிப்பதுடன், அது மிகச்சிறந்த விடயமாகும். பாதுகாப்பு சிறந்த நிலையில் உள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலத்துக்குத் திரும்பிச்செல்வதை எவரும் விரும்பவில்லை.

இருப்பினும் தமிழர்களின் பல அபிலாஷைகள் இன்னமும் பூர்த்திசெய்யப்படவேண்டிய நிலையிலேயே உள்ளன. குறிப்பாக யுத்தத்தின்போது காணாமல் போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காத்திருக்கின்றன. கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் இன்னமும் முழுமையாக அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மதவழிபாட்டுத்தலங்கள் மற்றும் ஆலயங்களை அடிப்படையாகக்கொண்டு நிலவும் குழப்பங்களுக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்படவேண்டும். வட இலங்கையில் வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுபீட்சம் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும். இலங்கை அரசு அதிகாரங்களைப் பகிரவேண்டும்.

தமிழர் உரிமைகளுக்கான போராட்டம் தொடரும். இருப்பினும் அது வன்முறையற்ற விதத்தில் தொடரும் என அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ம-7,10)

## ஆளுநர்...

தனியார் சிற்றூர்தி சங்கத்தில் காரைநகர் சிற்றூர்தி சங்கத்திற்கு பேரூந்து உரிம மாற்றம் மேற்கொள்ளும் பொழுது சங்க உறுப்பினர்களுக்கிடையில் அறியப்படுத்தி வழித்தடத்தில் இருப்பவர்களுக்கிடையில் வழித்தட அனுமதி விற்கப்படுவது சங்கத்தின் யாப்புசார் வழமையாக இருந்து வந்துள்ளது.

இந்நிலையில் குறித்த சங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் வழித்தடத்தில் அல்லாத அராலி பகுதியினை சேர்ந்த ஒருவருக்கு வழித்தட அனுமதிப் பத்திரத்தினை விற்பனை செய்துள்ளார். இது தொடர்பில் விற்பனை செய்வதற்கு முதலே வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு கடிதம் மூலம் அறியப்படுத்தியும் சபை நடவடிக்கை எடுக்கபடவில்லை. இது தொடர்பில் சம்பந்தபட்ட அதிகாரிகள் ஆளுநருக்கும் அறியப்படுத்தி நடவடிக்கை எடுக்கபடவில்லை என ஏற்கனவே குறித்த சங்கத்தினர் காரைநகரில் போராட்டம் ஒன்றினை நடாத்தியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று காலை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினர் நேரடியாக காரைநகரிற்கு வருகை தந்து சங்கத்துடன் எதுவித சந்திப்புக்களையும் நடாத்தாது பேரூந்தினை ஓட அனுமதியளித்துள்ளனர்.

இதனை கண்டித்து யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகம் முன்பாக வயிற்றில் அடிக்காதே!,வீதி பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையே நடைமுறையை மாற்றாதே!, ஆளுநரே எமக்கு தீர்வு வேண்டும்!, சங்கத்தின் ஒற்றுமையை பிரிக்காதே!, தன்னிச்சையான செயற்பாட்டினை உடன் நிறுத்து! என்ற கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆளுநர் அலுவலகம் முன் பேரணியாக நடந்து வந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து ஆளுநர் சார்பில் வருகை தந்த ஆளுநர் அலுவலக அதிகாரியிடம் மகஜர் ஒன்றினை பேரூந்து சங்க பிரதிநிதிகள் கையளித்தனர். (ம-7,10,33)


## தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில்
### வருடாந்த வெளிமடை உற்சவம் - 10.05.2024

## தற்காலிக கடை வழுங்குதல் பற்றிய அறிவித்தல்

கோயில் வளாகத்தினுள் கடைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை. கடைகள் வைப்பதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கடை வைக்க விரும்புவோர் 08.05.2024 புதன்கிழமை காலை 10 மணியளவில் தும்பளை நெ.அ.கோ.த.ப சபை காரியாலயத்திற்கு சமூகமளிக்கவும். கடை வழுங்குதல் 10.00 மணியில் இருந்து 12.00 மணி வரை நடைபெறும்.

**தும்பளை நெல்லண்டை அம்மன் கோவில், தரும பரிபாலன சபை.**

(C-0258)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 25 இலட்சம் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.

(625)

**077 88 62 927**

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:

(623)

**074 17 37 684**

## பணிப்பெண் தேவை

இரண்டு பேர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சமையல் செய்வதற்கு பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:

**077 436 6423**

(C-0262)

## நவீன மயப்படுத்தப்பட்ட வியாபார ஸ்தலம் வாடகைக்கு

கன்னாதிட்டி சிவன் கோவில் அருகாமையில் முற்று முழுதாக நவீன மயப்படுத்தப்பட்ட வியாபார ஸ்தலம் (Attach toilet bathroom) மாபிள் Roal கதவு 04.05.2024 இல் இருந்து வாடகைக்கு கொடுக்கப்படவுள்ளது. வியாபாரத்துக்கு உகந்த கிளினிக், மருந்தகம்(பார்மசி), நகைக்கடை, அடைவுக் கடை, கணினி சம்பந்தப்பட்ட தொழிலகம், ரியூசன் Center அனைத்துக்கும் உகந்தது. அத்துடன் (விரும்பின்) 1 ஆம் மாடி அப்பாட்மன்ட முற்றுமுழுதாக சீரமைக்கப்பட்டு தளபாடத்துடனும் சேர்த்து அல்லது தனிப்பட்ட வகையிலோ வாடகைக்கு விடப்படும். அத்துடன் புதிய LG குளிர்சாதனப்பெட்டி மற்றும் புதிய Gas அடுப்பு விற்பனைக்குண்டு. அத்துடன் 3 ஆவது மாடி சகல வசதிகளுடனும் நாள்/ கிழமை வாடகைக்கு கொடுக்கப்படும். தேவைப்படின் உணவு வசதிகளும் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு :

(635)

**077 030 4951, 077 869 4913**
**077 832 1564**


## இதய அஞ்சலி

எமது பல்கலைக்கழக கலைப் பிரிவு நண்பனும் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியருமான **திரு.ந.விபுலன்** அவர்களின் அன்புத் தாயார்



### அமரர் திருமதி நற்குணராசா மனோன்மணி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குகொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!


பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்
யாழ்.பல்கலைக்கழக 95/96 நண்பர்கள்

(C-0260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவர் ஆட்சிக்கு வந்தாலும் நடக்கப் போவது சிங்கள ஆட்சியே

## தமிழ்பேசும் பொதுவேட்பாளர் எமக்கு அவசியம் என்கிறார் விக்னேஸ்வரன் எம்.பி



(யாழ்ப்பாணம்)

ஆயுதமேந்தி போராடுவது மட்டும் போராட்டம் அல்ல. போராடும் போது செயல்திறனும் செயல் நுட்பமும் எமக்கு அவசியம் என தமிழ் மக்கள் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மே தினப் போராட்டங்கள், தொழிலாளர் போராட்டங்கள் ஆகியன வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு ஒரு பெரும் உண்மையை உணர்த்தி நிற்கின்றன.

அதாவது, போராட்ட மனோநிலையை நாங்கள் கைவிட்டோமானால் இழந்த உரிமைகளை நாம் திரும்பவும் பெற முடியாது.

ஆயுத மேந்தி போராடுவது மட்டும் போராட்டம் என்று நாம் நினைக்கக்கூடாது. போராடும் போது செயல்திறனும் செயல் நுட்பமும் எமக்கு அவசியம். அவ்வாறான ஒரு மனநிலையில்தான் இன்று ஒரு தமிழ் பேசும் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கவேண்டும் என்று கூறி வருகின்றோம்.

பொதுவேட்பாளர் தேர்தலில் நாம் தேர்தலில் வெல்ல போட்டியிடவில்லை.பின் எதற்காக என்று கேட்டால் எமது நிலையை எமது மக்களுக்கும் மற்றையோருக்கு தெளிவு படுத்தவும் மக்கள் தீர்ப்பு ஒன்றை வட, கிழக்கு மாகாணங்களில் பெற ஆவன செய்யவுமேதான் இந்த ஏற்பாட்டை வலியுறுத்துகின்றோம். ஒற்றையாட்சியானது இந்த நாட்டை சிங்கள மக்களுக்காக, சிங்கள மக்களால் பெரும்பான்மை சிங்கள மக்களின் நலன்பேணி நடத்தப்படும் ஓர் ஆட்சியாகும்.

எவர் ஆட்சிக்கு வந்தாலும் நடக்கப்போவது சிங்கள இனவழி ஆட்சியே. எமக்கு சுய நிர்ணய அதிகாரம்இருக்கின்றது என்று யார் சொன்னார்கள்?

இன்று இனவழியாட்சியே இங்கு நடந்து வருகின்றது. அதை மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்றுவதாயின் நாம் ஒற்றுமைப்பட வேண்டும். எமது குரல் ஐ. நா.வரையில் கேட்க வேண்டும்.

கேட்டதன் பின்னர் வட, கிழக்கில் மக்கள் தீர்மானத்துக்காக சர்வதேச நாடுகளால் இங்கு தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதை உலகுக்கு எடுத்துக்கூற ஒரு தமிழ் பொது வேட்பாளர் ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்ற வேண்டும் எனவும் தெரிவித்தார். (நி-6)

# பணமோசடி தொடர்பில் அவதானத்துடன் செயற்படுங்கள்

### சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனக் கூறி வியாபாரிகளிடமிருந்து பணம் பெறும் கும்பல் தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான பண மோசடிகள் தொடர்பில் பெரும்பாலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவரான உபுல் ரோஹன தெரிவித்தார்.

இந்த மோசடி கும்பலானது தொலைபேசி அழைப்புகள் மூலம் வியாபாரிகளுடன் தொடர்பு கொண்டு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனக் கூறி பண மோசடி செய்வதாகவும் அவ்வாறான நபர்களிடமிருந்து அவதானமாக இருக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-6)


மங்களகரமான திறப்பு விழா

சத்தியா ஜீவல்லர்ஸ்

43 ஆவது வருடத்தில் கால் பதிக்கும் நன்மதிப்பினைப் பெற்ற
சிறிநதியா நகை மாளிகையின் புதியதோர் உதயம்
சத்தியா ஜீவல்லர்ஸ்
ஒரே கூரையின் கீழ் மங்களகரமான ஆரம்பம்
இன்று 03.05.2024 காலை 6 மணியிலிருந்து 7 மணிவரையான
சுப நேரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.



(c-0253)

குறிப்பு : 10.05.2024 அக்ஷய திருதியை முன்னிட்டு
எம்மிடம் கொள்வனவு செய்யும்
தங்க நகைகளுக்குபெறுமதி மிக்க
பரிசில்கள் வழங்கப்படும்.
இன்றிலிருந்து முற்பதிவுகளை
மேற்கொள்ள முடியும் என்பதை
அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்
அக்ஷய திருதியை முன்னிட்டு விசேட விலைக் கழிவு



பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள்
அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

இணை நிறுவனங்கள்
NSR JEWELLERY சிறிநதியா நகை மாளிகை சத்தியா ஜீவல்லர்ஸ்
இல.136, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல: 021 221 1332, 077 236 7416


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புவி தயவில் தப்பியது ஹைதராபாத்

## இறுதிப் பந்துவரை நெருக்கிய ராஜஸ்தான்




ஹைதராபாத் அணிக்கு எதிரான போட்டியில் கடைசி பந்தில் தோல்வியடைந்தது ராஜஸ்தான் அணி.

ஹைதராபாத் ராஜிவ் மைதானத்தில் நேற்று நடந்த ஐ.பி.எல்., போட்டியில் ஹைதராபாத் - ராஜஸ்தான் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணித் தலைவர் கம்மின்ஸ், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**திணறல் ஆரம்பம்**

ஹைதராபாத் அணிக்கு டிராவிஸ் ஹெட், அபிஷேக் சர்மா (12) ஜோடி திணறல் ஆரம்பம் கொடுத்தது. அன்மோல்பிரீத் சிங்கும் 5 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, ஹைதராபாத் அணி முதல் 8 ஓவர்களில் 48/2 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது. இதன் பின் ஆட்டம் அப்படியே தலைகீழாக மாறியது. ஹெட், நிதிஷ் குமார் இணைந்து வேகமாக ரன் சேர்த்தனர்.

**ஹெட் அரைச்சதம்**

சகால் வீசிய 9ஆவது ஓவரின் கடைசி 3 பந்தில் 6, 6, 4 என விளாசினார் ஹெட். இவருக்கு கைகொடுத்த நிதிஷ், அஷ்வின், அவேஷ் கான் பந்துகளை சிக்சருக்கு அனுப்பினார். ஹெட், இத்தொடரில் 4ஆவது அரைசதம் எட்டினார். சகால் வீசிய 13வது ஓவரில் நிதிஷ் ஓட்ட மழை (6, 4, 6, 4) பொழிய 21 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. ஹைதராபாத் 14.1 ஓவர்களில் 131 ஓட்டங்கள் குவித்தது.

**நிதிஷ் கலக்கல்**

அவேஷ் கான் "வேகத்தில்" ஹெட் (58) போல்டாக, நிதிஷ் 30ஆவது பந்தில் அரைச்சதம் எட்டினார். அடுத்து அஷ்வின் ஓவரில் (16 வது) அடுத்தடுத்து இரண்டு சிக்சர் அடித்தார். இவருடன் ஜோடி சேர்ந்த கிளாசன், சகால் வீசிய 16வது ஓவரின் முதல் இரு பந்தில் அடுத்தடுத்து சிக்சர் விளாசினார்.

தனது விளாசலை நிறுத்தாத நிதிஷ், அவேஷ் கான் பந்துகளை சிக்சர், பவுண்டரிக்கு அனுப்பி மிரட்டினார். சந்தீப் சர்மா வீசிய கடைசி ஓவரில் கிளாசன் தன் பங்கிற்கு, பவுண்டரி, சிக்சர் அடித்தார். ஹைதராபாத் அணி 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 201 ஓட்டங்கள் குவித்தது. நிதிஷ் (76), கிளாசன் (42) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஐந்தாவது முறை**

நேற்று 201/3 ஓட்டங்கள் எடுத்த ஹைதராபாத் அணி, நடப்பு ஐ.பி.எல்., தொடரில் ஐந்தாவது முறையாக 200 அல்லது அதற்கும் மேல் ஓட்டங்கள் எடுத்தது. இதற்கு முன் கொல்கத்தா (204/7), மும்பை (277/3), பெங்களூரு (287/3), டில்லிக்கு (266/7) எதிராக 200 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்தது.

**பராக் ஆறுதல்**

ராஜஸ்தான் அணிக்கு தொடக்கத்தில் பட்லர், சஞ்சு சாம்சன் என இருவரையும், புவனேஷ்வர் குமார் "டக்" அவுட்டாக்கினர். 3ஆவது விக்கெட்டுக்காக ஜெய்ஸ்வால் (67), ரியான் பராக் (77) ஜோடி 134 ஓட்டங்களைச் சேர்த்தது. ஹெட்மயர் (13), ஜுரல் (1) ஆட்டமிழக்க, போட்டி ஹைதராபாத் பக்கம் திரும்பியது.

புவனேஷ்வர் வீசிய கடைசி ஓவரில் ராஜஸ்தான் வெற்றிக்கு 13 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முதல் 2 பந்துகளில் 3 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன. 3, 4, 5 ஆவது பந்தில் பாவெல், 4, 2, 2 ஓட்டங்கள் என எடுத்தார். கடைசி பந்தில் 2 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் பாவெல் (27) ஆட்டமிழக்க, ராஜஸ்தான் 20 ஓவர்களில் 200/7 ஓட்டங்கள் எடுத்தது. ஒரு ஓட்டத்தால் ஹைதராபாத் அணி "திரில்" வெற்றி பெற்றது

# தொடரை வென்றது இந்தியா

## பங்களாதேஷ் பெண்கள் ஏமாற்றம்




ஷபாலி வர்மா அரைச்சதம் விளாச இந்திய பெண்கள் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தொடரை 3-0 எனக் கைப்பற்றி முன்னிலை பெற்றது. பங்களாதேஷ் அணி மீண்டும் ஏமாற்றியது.

பங்களாதேஷ் சென்றுள்ள இந்திய பெண்கள் அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டியில் இந்தியா வென்றது. நேற்று சில்ஹெட்டில் மூன்றாவது போட்டி நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹர்மன்பிரீத் கவுர் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

பங்களாதேஷ் அணிக்கு முர்ஷிதா (9) ஏமாற்றினார். திலாரா அக்தர் (39), அணித் தலைவர் நிகர் சுல்தானா (28) ஓரளவு கைகொடுத்தனர். சோபானா (15), பாஹிமா (0) உள்ளிட்டோர் சோபிக்கவில்லை.

20 ஓவர்களில் பங்களாதேஷ் அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்களை எடுத்தது. இந்தியா சார்பில் ராதா யாதவ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

**ஷபாலி அரைச்சதம்**

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஸ்மிருதி மந்தனா, ஷபாலி வர்மா ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. அபாரமாக ஆடிய ஷபாலி, 36 பந்து களில் அரைச்சதம் எட்டினார். இது, சர்வதேச "ரி20" அரங்கில் ஷபாலியின் 9வது அரைசதம். முதல் விக்கெட்டுக்கு 91 ஓட்டங்கள் சேர்த்த போது ஷபாலி (51) ஆட்டமிழந்தார்.

**சூப்பர் ஜோடி**

இந்தியாவின் மந்தனா, ஷபாலி வர்மா ஜோடி முதல் விக்கெட்டுக்கு 91 ஓட்டங்கள் சேர்த்தது. இந்த ஜோடி, சர்வதேச "ரி20" அரங்கில் 2000 ஓட்டங்களுக்கு மேல் சேர்த்த முதல் இந்திய ஜோடியானது. சர்வதேச அளவில் 3வது ஜோடியானது. ஏற்கெனவே அவுஸ்திரேலியாவின் அலிசா ஹீலி-பெத் மூனே (2562 ஓட்.), நியூசிலாந்தின் சுசீ பேட்ஸ்-சோபி டெவின் (2536) ஜோடி இப்படி ஓட்டங்கள் குவித்தன.

மந்தனா (47) அரைச்சத வாய்ப்பை இழந்து வெளியேறினார். ஹேமலதா (9) நிலைக்கவில்லை.

நஹிதா பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ரிச்சா கோஷ் வெற்றியை உறுதி செய்தார். இந்திய அணி 18.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 121 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஹர்மன்பிரீத் (6), ரிச்சா கோஷ் (8) ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகி விருதை ஷபாலி வென்றார்.

# நியூசிலாந்து அணியில் ரச்சின்

## 'உலக' அணி அறிவிப்பு




"ரி20" உலகக் கிண்ணத் தொடருக்கான நியூசிலாந்து அணியில் ரச்சின் ரவிந்திரா வாய்ப்பு பெற்றார்.

அமெரிக்கா, வெஸ்ட் இண்டீசில் "ரி20" உலகக் கிண்ணத் தொடர் (ஜூன் 1-29) நடக்க உள்ளது. இதற்கான நியூசிலாந்து உத்தேச அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அணித் தலைவர் வில்லியம்சன், ஆறாவது முறையாக உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்க உள்ளார். "வேகப்புயல்" சவுத்தீ ஏழாவது முறையாக "உலக" வாய்ப்பு பெற்றுள்ளார். போல்ட், பெர்குசன் ஜிம்மி நீஷம் உள்ளிட்ட அனுபவ வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**கான்வே வாய்ப்பு**

சென்னை அணிக்காக விளையாடும் ரச்சின் ரவிந்திரா, கான்வே, டேரில் மிட்சல், சான்ட்னர் என நான்கு பேர் வாய்ப்பு பெற்றுள்ளனர். ஐ.பி.எல்., தொடரில் இருந்து இம்முறை கட்டை விரல் காயத்தால் விலகிய தொடக்க வீரர் கான்வே, தேறி வருகிறார். "சகலதுறை வீரர்" ரச்சின், "வேகப்புயல்" மட் ஹென்றி, உலக கிண்ணத் தொடரில் புதுமுகமாக களமிறங்க உள்ளனர்.

15 வீரர்களில் 13 பேருக்கு மே.தீவுகளில் நடந்த "ரி20" தொடரில் (2022) விளையாடிய அனுபவம் உண்டு. 6 பேர் கரிபியன் பிரிமியர் லீக் "ரி20" தொடரில் விளையாடியுள்ளனர். "ரிசர்வ்" வீரராக வேகப்பந்துவீச்சாளர் பென் சியர்ஸ் இடம் பெற்றுள்ளார். காயத்தால் அவதிப்படும் மில்ன், ஜேமிசன் இடம்பெறவில்லை.

"ரி20" உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கும் நியூசிலாந்து வீரர்களுக்கான புதிய "ஜெர்சி" அறிமுகம் செய்யப்பட்டது. இது 1999, உலகக் கிண்ணத் தொடர் ஜெர்சியை போல வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அணி விபரம்**

வில்லியம்சன் (அணித் தலைவர்), ஆலன், போல்ட், பிரேஸ்வெல், மார்க் சாப்மேன், கான்வே, பெர்குசன், மட் ஹென்றி, டேரில் மிட்சல், ஜிம்மி நீஷம், கிளன் பிலிப்ஸ், ரச்சின் ரவிந்திரா, சான்ட்னர், இஷ் சோதி, சவுத்தீ.

**"ரிசர்வ்" வீரர்:** பென் சியர்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமார் ரூ.9 கோடி பெறுமதியான சொத்துக்கள் மன்னாரில் முடக்கம்

## சந்தேக நபர் கைது



(மன்னார்)

யுக்திய தேடுதல் நடவடிக்கையின் கீழ் குற்றப்புலனாய்வு பிரிவின் கீழ் பணிக்கப்பட்ட விசாரணைக்கு அமைவாக சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையிலேயே சந்தேக நபர் ஒருவரின் 9 கோடியே 30 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் நேற்று முடக்கப்பட்டுள்ளது.

மன்னார், தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 43 வயதான சந்தேக நபர் ஒருவருக்கு சொந்தமான இரண்டு வீடுகள், சொகுசு வாகனம் உள்ளடங்களாக 9 கோடியே 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட் களே மேற்படி நீதிமன்ற அனுமதியுடன் முடக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படை க்கப்பட்டுள்ளதுடன் இதனை தொடர்ந்து உயர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் சொத்துக்களை அரசுடமையாக்கும் செய ற்பாட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை என்பதுடன் இது போன்று சட்டவிரோதமாக சொத்துக்கள் ஈட்டிய பல்வேறு நபர்கள் தொட ர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)

# பச்சை மிளகாய் வீழ்ச்சியால் செய்கையாளர்கள் பாதிப்பு



(தருமபுரம்)

அரசாங்கத்தின் நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேசத்தில் 300 இற்கு மேற்பட்டோர் மிளகாய் செய்கையில் ஈடுபடுகின்ற நிலையில் தற்பொழுது பச்சை மிளகாய் 60 தொடக்கம் 70 ரூபாய்க்கே கொள்வனவு செய்கின்ற நிலையில் தமது உற்பத்தி செலவையே ஈடு செய்ய முடியாத நிலையுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

தற்பொழுது பச்சை மிளகாயை அறுவடை செய்வதற்காக கிலோ ஒன்றுக்கு நாம் 30 ரூபாய் தொடக்கம் 40 ரூபாய் செலவு செய்வதாகவும் விற்பனை செய்யும் பொழுது 70 ரூபாய்க்கு இடைத்தரகர்கள் மூலம் கொள்வனவு செய்யப்படுவதாகவும் இந்த பச்சை மிளகாயினை உலரவிடுவதற்கான இயந்திர வசதிகள் இல்லாத காரணத்தினால் அடிமாட்டு விலைக்கு விற்பனை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

உரிய அதிகாரிகள் தமது உற்பத்திக்கு நியாய விலையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-316)

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நன்நாளில்
## வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரரை வணங்கி வரம் பல பெறுவோம்

சமய குரவர்கள் நால்வரையும் சந்தான குரவர்கள் நால்வரையும் குருவாகப் போற்றி வணங்கும் சைவசமயிகளாகிய நாம் குருவருள் பெற்றுத் திருவருள் பெறச் சிவனடியைச் சிந்திப்போம்.

சைவசமய குரவர்கள்

- திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
- திருநாவுக்கரசு நாயனார்
- சுந்தரமூர்த்தி நாயனார்
- மாணிக்கவாசக சுவாமிகள்

இந் நால்வரில் மண்ணுலகில் நீண்டகாலம் வாழ்ந்தவர் திருநாவுக்கரசு நாயனார். சைவசமயத்தைக் காத்து வளர்த்தவர்.

- நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளைத் தந்தவர்
- அற்புதம் பல செய்தவர்
- முதன் முதலாகப் பாதயாத்திரை செய்து கைலைக் காட்சியைக் கண்டவர்.
- முதன் முதலாக உண்ணாவிரதம் இருந்து வெற்றி கண்டவர்
- "நாமார்க்கும் குடியல்லோம்" எனப் புரட்சி செய்தவர்.
- திருஞானசம்பந்தர் உடன் இணைந்து அன்னதானம் முதலான சமூகப்பணிகள் புரிந்தவர்.
- வேதத்தால் பூட்டப்பட்ட திருக்கதவை தமிழ்மறை ஓதி திறப்பித்தவர்.

நாமும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நன்நாளான சித்திரைச்சதய நாளில் (03.05.2024) இன்று வீதிவலம் வரும் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானையும் அப்பர் பெருமானையும் வழிபட்டு குருவருளாலே திருவருள் பெறுவோம். சிவசின்னங்களை மதிப்போம். மெய்பொருளாகப் போற்றுவோம்.

இறைவன் திருவடி அடைவதையே தலையாய குறிக்கோளாகக் கொண்டவர்கள் அருளாளர்கள். சிவக்கீர்த்திகளையும் போற்றி, அவனது அருவுருவ வழிபாட்டின் மூலம் அருவமாகிய முத்தி நிலையை உணர்தலே சைவச்சின்னங்களை அணிந்து சைவநெறி என்பதை நன்கு தெரிந்தவர்கள்.

"அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்,
அன்பே சிவமாய் அமர்ந்தாரே"
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
ஓம்நமசிவாய"

(சி-256)

**க.கு.க.சிவபாலன்**

# இராசிபலன்

03.05. 2024
சித்திரை 20, வெள்ளிக்கிழமை
தசமி முன்னிரவு 8.38 மணிவரை
சதயம் முன்னிரவு 9.32 மணிவரை
சுபநேரம் 5.56-7.26மணிவரை
இராகுகாலம் 10.26-11.56 மணிவரை
சந்திராஷ்டமம் - திருவாதிரை, புனர்பூசம்

**வளவன்**



எதிர்பாராத முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும்.



தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரும், புதிய முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.



ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.



புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.



எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக வந்து சேரும், குடும்பத்தில் உறவினர்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், கௌரவமான நாள்.



பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தாய்வழி ஆதரவு பெருகும் வாய்ப்புண்டு.



இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.



குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும் வாய்ப்புண்டு.



நண்பர்களின் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், வாக்கு மேன்மையுண்டு.



புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கலாம், உறவினர் நலன் கருதிய செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.



தொழிலில் சிறு மாற்றம் செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், தூர தேச செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும்.

கெட்ட பழக்கங்க[illegible] அது போவது கடினம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்ட அளம்பில் துயிலுமில்ல காணி சுவீகரிப்பு

(நெளுக்குளம்)

**முல்லைத்தீவு - அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியை அளவீடு செய்யும் பணி மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.**

நில அளவைத் திணைக் களத்தினர் மற்றும், கரைதுறைப்பற்று காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்கள், குறித்த மாவீரர் துயிலுமில்ல காணியினை அளவீடு செய்ய நேற்று வருகை தந்திருந்த வேளை மாவீரர்களின் பெற்றோர், அப்பகுதிமக்கள் மற்றும், அப்பகுதி அரசியல் கட்சிப்பிரமுகர்கள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் ஜீட்சன் ஆகியோரின் தலையீட்டால் குறித்த காணிசுவீகரிப்பு நடவடிக்கைக்கு கடுமையான எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர்.



குறித்த காணியினை அளவீடு செய்து, இராணுவத்திற்காக சுவீகரிக்கும் நடவடிக்கையினை அனுமதிக்க முடியாதென அப்பகுதிமக்களாலும், மக்கள் பிரதிநிதிகளாலும், அங்கு வருகை தந்த நில அளவைத் திணைக்கள அதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இராணுவத்தினருக்காக காணி சுவீகரிக்கும் முயற்சி கைவிடப்பட்டு, நில அளவை திணைக்களத்தினர் அங்கிருந்து சென்றிருந்தனர். அதேவேளை அதிகளவிலான பொலிஸார் அப்பகுதியில் பிரசன்னமாகியிருந்தனர்.

இவ்வருடம் ஜனவரி மாதம் 18 ஆம் திகதியும் அளவீட்டு பணிக்காக வருகைதந்த போது எதிர்ப்பினை வெளியிட்ட பின்னர் அங்கிருந்து சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-299)

## செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

யா/வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று வெள்ளிக் கிழமை பி.ப 2 மணிக்கு வித்தியாசாலை மைதானத்தில் வித்தியாசாலை அதிபர் ஜெ. கோகுலவாசன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், சிறப்பு விருந்தினராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் நோபேட் உதயகுமார், கௌரவ விருந்தினராக சங்கானை ஹட்டன் நேசனல் வங்கி முகாமையாளர் திருமதி.மீனா சதீசன் மற்றும் சங்கானை பிரதேச செயலக நிர்வாக அலுவலர் (பழைய மாணவி) திருமதி. நேசபவானி தியாகச்சந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் ஜீன் மாதம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு எண்ணெய்க் காப்பு சாற்றும் நிகழ்வு ஜீன் மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.25 மணிமுதல் 11.40 மணி வரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் இடம் பெறும் என அறிவித்துள்ளனர். (நி-6)

## சிலம்பம் போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக சிலம்பம் விளையாட்டு சம்மேளனம் மற்றும் சிவலீமன் சிலம்பம் சம்மேளனம் இணைந்து நடத்தும் சர்வதேச சிலம்பம் போட்டி நாளை சனிக் கிழமை காலை 7.10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் குறித்த சம்மேளனத்தின் தலைவர் பாபு மாஸ்டர் தலைமையில் நடைபெறவுள்ளது. (நி-6)

## அரச கால்நடை வைத்தியர்கள் சுகயீன விடுமுறை போராட்டம்

(தருமபுரம்)

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரச கால்நடை வைத்தியர்கள் நேற்று சுகயீன விடுமுறை போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன் காரணமாக, கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்திற்கு வருகை தந்த மக்கள் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பளை கால்நடை வைத்திய அலுவலகத்தின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
| --- | --- | --- | --- | --- | --- |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 100 | 100-150 | 120 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 200 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 80 | 60 | 60-80 | 120 |
| தக்காளி | 160 | 100 | 100 | 100-120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 130 | 120 | 100-120 | 140 |
| கோவா | 100 | 200 | 150 | 150 | 200 |
| கரட் | 100 | 240 | 200 | 200 | 250 |
| பூசணி | 100 | 140 | 140 | 80-100 | 100 |
| புடோல் | 100 | 200 | 200 | 100 | 150 |
| வாழைக்காய் | 120 | 100 | 100 | 80-120 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 320 | 120 | 200-350 | 400 |
| பெரிய வெங்காயம் | 350 | 300 | 350 | 210 | 300 |
| பாகற்காய் | 600 | 350 | 300 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 150 | 150 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | -- | 200 |
| பயற்றங்காய் | 160 | 300 | 180 | 150-180 | 120 |
| லீக்ஸ் | 250 | 220 | 220 | 200 | 250 |
| பீற்றூட் | 160 | 200 | 150 | 200 | 300 |
| கறிமிளகாய் | 300 | 150 | 150 | 200 | 250 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 800 | 300-600 | 600 |
| போஞ்சி | 250 | 350 | 300 | 260 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | 80 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 40-60 | 150 |
| தேசிக்காய் | 1000 | 800 | 800 | 600-750 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 110 | 100 | 50-110 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 100 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 60 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 40 | 80 | 80 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 80 | 80 |



தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் சத்திர சிகிச்சைப்பிரிவிற்கு நேற்று முன்தினம் லண்டன் அபயம் அறக்கட்டளையால் Endoscopy கருவி அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (படம்: சிவசாந்தன்)


1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். கந்தையா மகாதேவன்

அன்னை மடியில் — 28.02.1940

இறைவன் அடியில் — 14.05.2023

திதி — தசமி

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
எங்கள் அன்புத் தெய்வத்தின் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்கவில்லை
இன்னும் பல ஜென்மம் எடுத்தாலும்
நீங்களே எங்கள் அப்பாவாக இருக்க
இறைவன் எங்களுக்கு வரம் தர வேண்டும்

மகா கௌரி இல்லம்,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

உங்கள் பிரிவுத் துயரால் வாடும்
மனைவி, பிள்ளைகள்

(0037)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு போர் பதற்றம் இலங்கையையும் பாதிக்கும்

## பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**மத்திய கிழக்கு பிராந்தியத்தில் போர் நிலைமை மேலும் மோசமடைந்தால் அதன் எதிர்மறையான தாக்கம் இலங்கையை பல பகுதிகளில் பாதிக்கும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்களும், இலங்கையிலிருந்து அந்தப் பிராந்தியத்திற்கான இறக்குமதிகளும் கடுமையாகப் பாதிக்கப்படலாம் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியங்கா துனுசிங்க தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் பாரிய அளவிலான இலங்கை பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இலங்கையின் பொருளாதாரம் ஓரளவு மீண்டு வருவதற்கான பிரதான காரணமாக இருப்பதே வெளிநாடுகளில் வாழும் இலங்கை பணியாளர்களாகும்.

ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மத்திய கிழக்கு நாடுகளில் போர் நிலைமை ஏற்பட்டால், இலங்கைக்கு பாரிய அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் பகுதி கடும் தாக்கத்திற்குள்ளாகும்.

அதிகளவிலான தொழிலாளர்கள் பணியை இழக்க நேரிடும். புதிய தொழில்களுக்காக வெளிநாடு செல்வதில் பாதிப்பு ஏற்படலாம். மேலும் இலங்கையில் இருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகளவில் தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

இவ்வாறான ஆபத்தான நிலைமை ஏற்பட்டால் ஏற்றுமதி முழுமையாக பாதிக்கப்படும். அத்துடன் சுற்றுலாத் துறைக்கு மாத்திரமின்றி இந்த நாட்டில் எரிபொருள் விலைகளும் இதன் மூலம் அதிகரிக்கலாம்.

நாட்டின் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் அபாயம் காணப்படுகின்றது.

எவ்வாறாயினும், பல நாடுகளுக்கு தேர்தல் ஆண்டாக இருப்பதால் முக்கிய உலகத் தலைவர்கள் போர் சூழலுக்குள் செல்வதைத் தடுக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரக் கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியங்க துனுசிங்க மேலும் தெரிவித்தார். (நி-6)

# குருநகரில் மாபெரும் இரத்ததான முகாம்



(குருநகர்)

ஜேம்ஸ் வோரியர்ஸ் சமூக முன்னேற்ற கழகத்தின் 10 ஆவது ஆண்டை முன்னிட்டு ஜேம்ஸ் வோரியஸ் இளைஞர் கழகம் நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 3 மணி வரை குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (நி-6-106)

# யாழ்ப்பாணத்தின் முதலாவது 'டாக்டர்கள்'

## அமெரிக்கர் பயிற்றிய வைத்தியர்கள்



கா.இந்திரபாலா

(நேற்றைய தொடர்ச்சி...)

**ஸ்கடரின் மாணவர்**

ஸ்கடர் வைத்தியர் (இவ்வாறு தான் 19 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் கிறீன் வைத்தியர், சப்மன் வைத்தியர் என்றெல்லாம் அழைக்கப்பட்டனர்) முதலில் தெல்லிப்பளையில் பணியாற்றத் தொடங்கினார். அப்பொழுதுதான் முன்னர் குறிப்பிடப்பட்ட உவெல்ப்லீ மாணவனைச் சந்தித்தார். இம் மாணவன் அவருக்கு உதவியாக அப்பொழுதே பணியாற்றத் தொடங்கியிருக்கலாம்.

ஆறு மாதங்களின் பின்,ஸ்கடர் வைத்தியர் தெல்லிப்பளையை விட்டுப் பண்டத்தரிப்புக்குச் சென்று, அங்கு ஒரு புதிய வைத்திய சாலையை நிறுவினார். உவெல்ப்லீ அவருடன் கூடவே சென்று எட்டு ஆண்டுகளுக்கு மேலாக அவரிடம் இருந்து மருத்துவமும் அறுவை சிகிச்சையும் கற்று வைத்தியனாகப் பணிபுரிவதற்குத் தேவைப்பட்ட பயிற்சியையும் பெற்றார். ஸ்கடர் வைத்தியருக்குப் பண்டத்தரிப்பில் சுதேச மருத்துவ உதவியாளராக பணிபுரிந்தார்.

**பிற வைத்தியர்கள்**

உவெல்ப்லீயை விட வேறு யாழ்ப்பாணத்து இளைஞர்களும் ஸ்கடர் வைத்தியரால் பயிற்றப்பட்டுப் பின்னர் வைத்தியர்களாகத் தொழில் புரிந்தனர். ஒருவர் முன்னர் தெல்லிப்பளை வைத்திய சாலையில் உவறென் மிஷனரியாருக்கு உதவி செய்து, மருத்துவப் பயிற்சியைப் பெறத் தொடங்கி, ஸ்கடர் வைத்தியரிடம் பல ஆண்டுகள் பயிற்சி பெற்று உடுவிலில் சுதேச மருத்துவ உதவியாளராக பணிபுரிந்த George Koch ஆவார். இவர் 1803 இல் பிறந்தவர். உவெல்ப்லீ வைத்தியராகப் பயிற்றப்பட்ட பின் தொடர்ந்து அமெரிக்க மிஷனுடன் இருந்து வட்டுக்கோட்டையில் பணிபுரிந்தார். ஆனால், Koch பின்னர் விலகிச் சென்று தானாகத்தொழில்புரிந்தார். (இவருடைய தம்பி மகன் Dr. E.L. Koch இவரும் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர், கோல்கத்தாவில் மருத்துவம் கற்றவர் - கொழும்பில் பின்னர் நிறுவப்பட்ட மருத்துவக் கல்லூரியின் இரண்டாவது அதிபராகக் கடமை யாற்றியவர்.)

ஸ்கடர்வைத்தியர் பயிற்றிய இன்னொருவர் Samuel Willis. இவர் 1806 அளவில் பிறந்தவர். பண்டத்தரிப்பில்மிஷன் பள்ளி தொடக்கப்பட்டபோது சேர்ந்த முதல் மாணவர்களுள் ஒருவர். பெற்றோர் இவருக்குக் கொடுத்த பெயர் பொன்னையன். இவருக்கு நியூயோர்க்கில் இருந்த ஒரு கழகம் கொடையாளியாக இருந்தது. இவரும் பண்டத்தரிப்பில் சுதேச மருத்துவ உதவியாளரா கஸ்கடர் வைத்தியருக்கு உதவியவர்.

**செமினரிப் படிப்பு**

வட்டுக்கோட்டையில் செமினரி தொடக்கப்பட்டதும், உவெல்ப்லீ தன் அறிவை மேலும் வளர்த்துக் கொள்ள விரும்பி இந்த நிறுவனத்தில் படித்துக் கொண்டு மருத்துவ உதவியும் செய்தார். பின்னர் வட்டுக்கோட்டை மிஷன் நிலையத்தில் இணைந்து முழுநேர மருத்துவத் தொழில் புரிந்தார்.

**நோயும்மரணமும்**

செமினரியின் அதிபர் டனியெல் புவர் தனது நாளேட்டில் 1831 டிசம்பர் 13 இல் இப் பதிவைச் செய்துள்ளார் (மொழி பெயர்ப்பு): Typhus காய்ச்சல் தற்பொழுது இம் மாவட்டத்தில் யாழ்ப்பாணத்தில் பரவியுள்ளது. கடந்த சில நாட்களாக, ஒரேவீட்டில் நோயுற்ற மூன்று பிராமணர்களைக் கவனித்து வந்த உவெல்ப்லீ தானே இந்நோயால் தாக்கப்பட்டுள்ளார்."

நோயில் இருந்து குணமடையாது, டிசம்பர் 27 அதிகாலை உவெல்ப்லீ இறந்தார் என டனியெல் புவர் மிஷனரியார் பதிவு செய்துள்ளார். பின்னர் இம் மரணம் பற்றி இவர் அமெரிக்காவுக்கு அனுப்பிய செய்தி, Bostonநகரில் இருந்து வெளியான Missionary Herald இல் 1832 ஒக்டோபர் வெளியாகியது. அச் செய்தியின் இறுதியில் அவர் எழுதியுள்ளது கவனிக்கத் தக்கது.

"மருத்துவத்தில், சிறப்பாக அறுவை சிகிச்சையில், அவருக்கு இருந்த திறமையைக்கூடுதலாகப் பலரும் அறிந்ததும், சுதேசிகள்மத்தியில் அவருடைய தொழில் மிகவும் கூடியது. ஆகவே, அவருடைய மரணம் பொதுமக்களுக்கு ஓர் இழப்பாகும். அத்துடன் இது நம் அயலில் ஆழ்ந்த கவலைக்குரிய விடயமாகும்."

**ஸ்கடருக்குப் பின்**

ஸ்கடர் வைத்தியரை 1836இல் அமெரிக்கமிஷன் சென்னைக்குச் செல்லும் படி பணித்தது. யாழ்ப்பாணத்தின் இழப்பு தமிழ் நாட்டுக்குப் பெருவாய்ப்பாகியது. ஐந்து தலைமுறையைச் சேர்ந்த ஸ்கடர் குடும்பத்தினர் அங்கு மருத்துவ சேவையில்ஈடுபட்டனர். சிறப்பாக, ஸ்கடர்வைத்தியருடைய பேர்த்தி, Dr. Ida Scudder, பிரபல மருத்துவ நிறுவனமாகிய வேலூர் மருத்துவக் கல்லூரியை நிறுவிப் பெருந் தொண்டாற்றினார்.

ஸ்கடர் வைத்தியர் சென்ற பின்னரும் யாழ்ப்பாணத்து இளைஞர் பலர் அமெரிக்கரால் பயிற்றப்பட்டு மேலைத்தேச மருத்துவ வைத்தியர்களாகினர். கொழும்பில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கப்படுமுன் இவ் வளர்ச்சி யாழ்ப்பாணத்தில் காணப்பட்டது. இந்த வரலாறு யாழ்ப்பாண மருத்துவ காண்டத்தின் இன்னொரு படலம் ஆகும்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியரின் இதயத்தால் உயிர்வாழும் பாகிஸ்தான் இளம்பெண் ஆயிஷா

(டில்லி)

இந்தியா, பாகிஸ்தான் குறித்து பேசும் போது எமது நினைவலைகளில் சிறந்த விடயங்கள் எதுவும் புரை யோடுவதில்லை. இரு நாடுகளுக்கும் இடை யில் எல்லை மற்றும் அரசியல் காரணங்களால் அதிகரிக்கும் பிரச்சினைகள் சாதாரண மக்களின் வாழ்க்கையிலும் பாரியதாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

ஆனாலும் ஆறுதலான செய்தியொன்று அண்மையில் வெளியானது. பாகிஸ்தான் - கராச்சியை சேர்ந்த 19 வயதான இளம் பெண் ஆயிஷா ரஷான் நீண்ட நாட்களாக மாரடைப்பால் அவதியுற்று வந்துள்ளார்.

அவருடைய உடல்நிலை சீராக இல்லாமையால், விரைவில் இதய மாற்று அறுவை சிகிச்சையை முன்னெடுக்கு மாறு வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இந்த அறுவை சிகிச்சைக்கு 35 இலட்சம் ரூபா செலவாகும். எனினும், ஆயிஷாவின் தாயால் அந்த செலவை ஈடு செய்ய முடியவில்லை. மாற்று அறுவை சிகிச்சைக் காக காத்திருக்கும் சந்தர்ப்பத்தில், அவளைக் காப்பாற்றும் முயற்சியின் ஒரு அங்கமாக, இரத்தத்தைப் பாய்ச்ச உதவும் இடது வென்ட்ரிக்குலர் சாதனத்தைவைத்தியர்கள் பொருத்தினர். அந்த முயற்சியும் கைகூடவில்லை.

இறுதியாக , ஆயிஷாவுக்கு இதய மாற்று அறுவை சிகிச்சை செய்தாக வேண்டும் என வைத்தியர்கள் வலியுறுத்தினர்.

ஆயிஷாவுக்கு சிகிச்சையை மேற்கொள்ள இந்தியா பயணமாகினர்.இந்தியாவின் சுகாதார விதிமுறைகளின் படி, வெளிநாட்டுப் பிரஜையொரு வருக்கு தானம்செய்யப்பட்ட உடல் உறுப்புகளைப் பெறுவது கடினமாகும். எதிர்பாராத விதமாக ஆயிஷாவுக்கு மாற்று இதய அறுவை சிகிச்சைக்காக டெல்லியைச் சேர்ந்த ஒருவரின் இதயம் கிடைக்கப்பெற்றது. 69 வயதான உயிரிழுந்த இந்தியர் ஒருவரின் இதயம் அது.

மனிதநேயத்திற்கு இன, மத பேத வேறுபாடுகள் இல்லையென்றாலும், இந்தியாவும், பாகிஸ்தானும் எப்போதுமே நட்புறவைப் பேண விரும்பாத இரண்டு நாடுகள். மூளைச் சாவு அடைந்த ஒரு நோயா ளியிடமிருந்து பெறப்பட்ட இத யத்தைக் கொண்டு இந்திய வைத்தியர்கள் ஆயிஷாவுக்கு இலவசமாக இதய மாற்று அறுவை சிகிச்சையை மேற் கொண்டனர்.

மேலும், சென்னையிலுள்ள ஒரு நிறுவனம் ஆயிஷா வுக்கு தேவையான நிதியு தவியை வழங்கியது.

ஆயிஷாவுக்கு அறுவை சிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர் பாலகிருஷ்ணன் பின்வருமாறு கருத்து தெரிவித்தார். அவள் சிறு குழந்தை, அவள் என்னுடைய மகள் போன்றவள். ஒவ்வொரு உயிரும் முக்கியமானது. உலகிலுள்ள அனைவரின் வாழ்க்கையையும் எம்மால் மாற்ற முடியாது. ஆனால், எம்மை நாடி வருபவர்களின் வாழ்க்கையை மாற்ற முடியும்.

ஆயிஷாவும் அவருடைய குடும்பத்தினரும் மருத்துவர்களுக்கும் இந்திய அரசாங்கத்திற்கும் தமது நன்றிகளைத் தெரிவித்தனர். இந்தியரின் இதயத்துடன் ஆயிஷா இன்று நலமாக இருக்கின்றாள். (நி-6)

## பசியின் கொடு

## மண், இலைகளை சாப்

(சூடான்)

**சூடானில் உள்நாட்டு போர் காரணமாக விவசாய நட கைகள் எதுவும் இடம்பெறாத காரணத் தால் மக்கள் பசி கொடுமை தாங்க முடியாது மண், இலை, குழைக சாப்பிடும் அவல நிலைக்கு சென்றுள்ளதாக சர்வ ஊடகங்கள் தெரிவித்துள்ளன.**



கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் சூடான் கும் துணை இராணுவப்படைக்கும் இடை போர் வெடித்தது. இந்தப் போர் தற்போது வில்லை.

சூடானில் தற்போது சுமார் 49 மில்லிய வருகின்றனர். இதில் 18 மில்லியன் தட்டுப்பாடு காரணமாக பாதிக்கப்பட்டு உ நாட்டு போரில் காயமடைந்த 160 இற்கும் மற்றும் 60 இற்கும் மேற்பட்ட ஊழ கவலைக்கிடமாக உள்ளது.

சூடானில் ஏற்பட்ட சண்டையால் வி உற்பத்தி பாதிக்கப்பட்டதனால் மக்கள் உ

## எங்களுக்காக ஆர்ப்பாட்டம் செய்யும் உங்களிற்கு எங்கள் இதயத்திலிருந்து நன்றிகள்

அமெரிக்க கனடா பல்கலைக்கழக மாணவர்களிற்கு பாலஸ்தீன சிறுவர்கள்






(காசா)

காசாபள்ளத்தாக்கின் மத்தியில் உள்ள டெய்ர் எல் பலாவில் இடம் பெற்ற பேரணியில் அமெரிக்கா கனடாவில் தங்களிற்காக குரல்கொடுக்கும் மாணவர்களிற்கு ஆதரவு தெரிவிக்கும் வாசகங்களுடன் பாலஸ்தீன சிறுவர்கள் காணப் படும்படங்கள்வெளியாகியுள்ளன.

கொலம்பியா பல்கலைகழக் மாணவர் களிற்கும் ஏனைய பல்கலைகழக மாணவர் களிற் கும் அவர்கள் தங்கள் ஆதரவை வெளியிட்டுள்ளனர். (நி-6)

## பூங்கதவே தாழ் திறவாய்...

## பிரபல பின்னணிப் பாடகி உமா ரமணன் காலமானார்

(டில்லி)

பின்னணிப் பாடகி உமா ரமணன் (72) நேற்றுமுன் தினம் உடல்நலக் குறைவால் காலமானார். இளையராஜா இசையில் 1980 ஆம் ஆண்டு வெளி வந்த 'நிழல்கள்' படத்தில் இடம் பெற்ற 'பூங்கதவே தாழ் திற வாய்...' பாடல் மூலம் பிரபல மானவர் உமாரமணன்.

பிறகு, 'பன்னீர் புஷ்பங்கள்', 'கோயில் புறா' உள்ளிட்ட ஏராளமானப் படங்களில் பாடல்கள் பாடி தனது குரலால் ரசிகர்களைக் கவர்ந்தார்.

ஐ.ஏ.எஸ் அதிகாரியின் மகளான, உமாரமணன் எழுபதுகளில் பின்னணி பாடகர், இசையமைப் பாளர், நடிகர் எனப் பன்முகம் கொண்ட ஏ.வி.ரமணனை திருமணம் செய்தார். இவர்களுக்கு விக்னேஷ் ரமணன் என்கிற மகன் உள்ளார். (நி-6)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மை தாங்காது


# ாப்பிடும் சூடான் மக்கள்

ய நடவடிக்

கள் பசியின்

மைகளை

சர்வதேச



ம் சூடான் இராணுவத்திற்
க்கும் இடையே உள்நாட்டு
ர் தற்போது வரை குறைய

9 மில்லியன் மக்கள் வசித்து
ல்லியன் மக்கள் உணவு
கப்பட்டு உள்ளனர். உள்
0 இற்கும் மேற்பட்ட மக்கள்
பட்ட ஊழியர்கள் நிலை


டயால் விவசாயப் பயிர்கள்
மக்கள் உணவைத் தேடி

வீட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். மக்கள் இடம் பெயர்வால் அங்கு மலேரியா மற்றும் பிற நோய்கள் பரவுகின்றன.

மேலும் சூடானுக்கு வரும் சர்வதேச உதவிகள் பட்டினியால் வாடும் பகுதிகளில் உள்ள மக்களை சென்றடைவதை இராணுவம் தடுத்து வருகிறது. சூடான் உள்நாட்டு போரால் மிகப் பெரும் பசி, பட்டினி நிலை உருவாகி உள்ளது.

உணவு பொருட்கள் அனைத்தும் தீர்ந்து விட்டதால், விவசாயிகள் நடவுக்காக வாங்கிய விதை தானியங்களை சாப்பிட்டுள்ளனர். மக்கள் உயிர் வாழ மண், இலைகளை சாப்பிடும் அவல நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. (நி-6)

# எரிமலை வெடிப்பால் மூடப்பட்ட விமான நிலையங்கள்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின் வடக்கு சுலவேசி மாகாணத்தில் உள்ள ருயாங் தீவில் உள்ள எரிமலை ஒன்று கடந்த மாதம் வெடித்து சிதறத் தொடங்கியிருந்தது.

பின்னர் கடந்த சில நாட்களாக அந்த எரி மலை மீண்டும் வெடி த்து சிதற தொடங்கி உள்ளதுடன் முன் னெச்சரிக்கை நடவடிக்கையாக அந்த தீவில் உள்ள குடியிருப்புகளில் வசித்து வந்த 12 ஆயிரம் பொதுமக்கள் மீட்கப்பட்டனர்.

மேலும் எரிமலை வெடிப்பை தொடர்ந்து கண்காணித்து வரும் நிலையில் அதன் தாக்கம் அதிகமாக இருப்பதையடுத்து அங்குள்ள பாடசாலைகள், கல்லூரிகள் மூடப்பட்டுள்ளன

அத்துடன் சுற்றுலா பயணிகளின் வருகையைத் தவிர்க்கும் வகையில் சர்வதேச விமான நிலையமான சாம் ரதுலங்கி உட்பட 7 விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-6)

# வீதி தாழிறங்கியதால் ஏற்பட்ட பள்ளத்தில் அடுத்தடுத்து விழுந்த 18 வாகனங்கள்

## 19 பேர் ஸ்தலத்தில் உயிரிழப்பு



(பீஜிங்)

பீஜிங், தெற்கு சீனாவின் குவாங்டாங் மாகாணத்தில் உள்ள அதிவேக நெடுஞ்சாலையில் நேற்று ஏற்பட்ட திடீர் பள்ளத்தினால் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த 18 வாகனங்கள் அடுத்தடுத்து பள்ளத்தில் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பள்ளமானது 184.3 சதுர மீற்றர் அளவை கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்துள்ளதுடன் 30 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ஐ.நாவின் அணுசக்தி கண்காணிப்பு குழுவின் தலைவர் ஈரான் விஜயம்



(டெஹ்ரான்)

ஐக்கிய நாடுகள் சபையின் அணுசக்தி கண்காணிப்புக் குழுவின் தலைவர் அடுத்த வாரம் ஈரானுக்கு செல்லவுள்ளார்.

டெஹ்ரானின் அணுசக்தி திட்டம் யுரேனியத்தை ஆயுத தரமட்டத்திலிருந்து ஒரு படி தொலைவில் செறிவூட்டுகிறது.

மற்றும் சர்வதேச மேற்பார்வை குறை வாகவே உள்ளது என்று அதிகாரிகள் குறை கூறியுள்ள நிலையில் இந்த விஜயத்தை அவர் மேற் கொள்ளவுள்ளார்.

ரஃபேல் மரியானோ க்ரோஸியின் வருகை ஈரான் மத்திய நகரமான இஸ்ஃபஹானில் நடத்தும் அணுசக்தி மாநாட்டுடன் ஒத்துப் போகிறது.

ஈரான் எப்போதுமே அணு ஆயுதங்களைத் தேடுவதை மறுத்து வருகிறது.

அதன் அணு திட்டம் முற்றிலும் சிவிலியன் நோகங்களுக்காக என்று கூறியது.

இருப்பினும், அமெரிக்க புலனாய்வு அமைப்புகளும் IAEA உம் 2003 வரை ஈரான் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவ அணுசக்தி திட்டத்தைக் கொண்டிருந்ததாகக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இம் மாத இறுதியில் வெளியாகும்

## பரீட்சைத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர பெறுபேறுகள் இந்த மாத இறுதியில் வெளியாகும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சைக்கு மொத்தமாக 3 இலட்சத்து 46 ஆயிரத்து 976 பேர் தோற்றியிருந்தனர்.

இவற்றில் 2 இலட்சத்து 81 ஆயிரத்து 445 பாடசாலை பரீட்சார்த்திகளும் 65 ஆயிரத்து 531 தனியார் பரீட்சார்த்திகளும் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை எதிர்வரும் 6 ஆம் திகதி கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை ஆரம்பமாகவுள்ளது.

இந்த வருடம் 4 இலட்சத்து 59, ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இதன்படி மூவாயிரத்து 527 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். (நி-6)

# இன்றுடன் பாடசாலை விடுமுறை

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகளில் 2024ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் இன்றுடன் முடிவடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாடசாலைகளின் முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பமாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளின் மூன்றாம் கட்டம் மே மாதம் 31ஆம் திகதி நிறைவடைகின்றது.

அத்துடன், 2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் திங்கட்கிழமை (6) ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில் 3527 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி வரை க.பொ.த சாதாரண பரீட்சைகள் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2023 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இம்மாதம் கடைசி வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# ரைசியின் இலங்கை விஜயத்திற்கு எதிர்ப்பு வெளியிட்ட இஸ்ரேல்

(கொழும்பு)

ஈரானின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்தமை குறித்து இலங்கைக்கான இஸ்ரேலிய தூதுவர் நாமீர் கிலன் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் வைத்து அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் இந்த செயற்பாடு அதிருப்தியளிக்கிறது. அணிசேரா நாடு என இலங்கை தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது.

அநேக நாடுகள் இந்த அணிசேரா என்ற கொள்கையிலிருந்து விடுபட்டுள்ளது. இஸ்ரேல் மீது 350இற்கும் மேற்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி சில வார இடைவெளியில் ஈரான் ஜனாதிபதி இலங்கை விஜயம் செய்துள்ளார்.

இதனை தனிப்பட்ட ரீதியில் எதிர்க்கிறோம். இதேவேளை, காசாவில் இடம்பெற்று வரும் போர் பாலஸ்தீன மக்களுக்கு எதிரானது அல்ல. ஹமாஸ் இயக்கத்திற்கு எதிராகவே இஸ்ரேல் படையினர் போரில் ஈடுபட்டுள்ளனர்.

சிவிலியன் இழப்புக்களை வரையறுத்துக் கொள்வதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

# ஆளுநர்களாக இருவர் பதவியேற்பு




(கொழும்பு)

இரண்டு புதிய ஆளுநர்கள் நேற்று வியாழக்கிழமை முற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

இதன்படி, தென் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன, வட மேல் மாகாண ஆளுநராக நஸீர் அஹமட் ஆகியோர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். (நி-6)

# இன்று ஒரு தகவல் 112



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மேதைகளின் மறதி

ஒரு பெரிய தத்துவப் பேராசிரியர். தினமும் காலையிலே வாக்கிங் போய் வருவது வழக்கம். ஒரு நாள் அதிக தூரம் நடந்து போயிட்டார். திரும்பி வரும்போது மிகவும் களைத்துப் போய் விட்டார். கையிலே வாக்கிங் ஸ்டிக் இருக்கிறது அதன் துணையாலே மெதுவாக வீட்டுக்கு வந்து கொண்டு இருக்கிறார். வரும்பொழுதே மனதிற்குள்ளே தீர்மானம் செய்து கொண்டு கொண்டார்.

நேராக வீட்டுக்குப் போக வேண்டியது. பெட்ரூமிலே நுழைய வேண்டியது. வாக்கிங் ஸ்டிக்கை சுவர் மூலையிலே வைக்க வேண்டியது. பொத்தென்று படுக்கையிலே விழுந்து ஆனந்தமாக ஓய்வு எடுக்க வேண்டியது. இது தான் அவர் திட்டம்.

திட்டமெல்லாம் சரி தான். அதை நிறைவேற்றும் போது தான் ஒரு சின்ன குழப்பம் ஏற்பட்டு போய்விட்டது. வேறு ஒன்றும் இல்லை. இவர் நேராக உள்ளே போனார் பெட்ரூமுக்குப் போனார். கையிலே வாக்கிங் ஸ்டிக் இருந்தது அல்லவா அதை படுக்கையிலே வைத்தார். இவர் நேராகப் போய் சுவர் மூலையிலே சாய்ந்து குச்சி மாதிரி விரைப்பா நின்று கொண்டிருந்தார்.

தற்செயலாக அந்தப் பக்கம் வந்த அவருடைய மனைவி இதைப் பார்த்து பயந்து போய் விட்டார். அய்யய்யோ...என்ன ஆகிவிட்டது உங்களுக்கு? என்று அலற ஆரம்பித்து விட்டார். அவர் மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்துவிட்டு சொன்னார். சத்தம் போடாதே. பேசாம இரு வேறு ஒன்றுமில்லை நடந்து களைப்பாக இருந்தது அது தான் வந்தவுடனே குச்சியை சுவற்றிலே சாத்தி வைத்துவிட்டு நான் பெட் இலே படுத்து சௌகரியமாக ரெஸ்ட் எடுத்துக் கொண்டிருக்கின்றேன் என்றார். அந்த அம்மாவுக்கு சிரிப்பு தாங்கவில்லையாம். இது எவ்வளவு பெரிய ஞாபக மறதி பாருங்க.

இது வந்து நகைச்சுவைத் துணுக்கு இல்லை. நிஜமாகவே நடந்த சம்பவமாம்.

மிகவும் ஆச்சரியமாகத்தான் இருக்கு. மேதைகளிலே பல பேர் இப்படித் தான் ஞாபக மறதிக்காரங்களா இருந்திருக்கிறார்கள்..

thomas Huxlay - புகழ்பெற்ற பிரிட்டிஸ் விஞ்ஞானி. இவரை இன்னொரு ஊரிலே கற்பிப்பதற்காக கூப்பிட்டிருந்தார்கள். இவரும் புறப்பட்டு ஒரு ரயிலிலே போய்க் கொண்டிருந்தார். ரயில் மிகவும் தாமதமாக போய்ச்சேர்ந்தது.

இவர் அவசரமாக ரயிலை விட்டு இறங்கி ஓடி அங்கே நின்று கொண்டிருந்த ஒரு குதிரை வண்டியிலே ஏறினார். வேகமாகப் போ என்று கத்தினார். கோச் ஓடிவரும் குதிரையை விரட்ட ஆரம்பித்தார். நீண்ட தூரம் போன பின்பு ஒரு கடவை வந்தது.

சேர்.. எந்த பக்கம் திரும்ப வேண்டும் என்று கேட்டார்.

அப்பத்தான் இவர் முழிக்க ஆரம்பித்தார். எங்கே போக வேண்டும் என்பதை மறந்துவிட்டார்.வண்டியிலே ஏறுகின்ற போது எங்கே போக வேண்டும் என்று சொன்னேன்? என்று வண்டிக்காரரிடம் கேட்டார்.

சேர் நீங்கள் அதெல்லாம் ஒன்றும் சொல்லவில்லை. வேகமாக வண்டியை ஓடு என்று சொன்னீர்கள் . ஓடினேன். அவ்வளவு தான் என்றார் அவர்.

அதன் பின்பு என்ன ஆகிவிட்டது என்று தெரியவில்லை.

ஐன்ஸ்டின் இருந்தார். அல்லவா? ஒரு சமயம் பாரிசுக்குப் போனார். ஒரு பெரிய ஆடம்பரமான ஹோட்டலிலே தங்கினார். சாயந்தரமாக ஊரை சுத்திப் பார்க்க வேண்டுமென்று ஒரு ஆசை. மெதுவாக ஹோட்டலை விட்டு இறங்கி தெருவிலே நடக்க ஆரம்பித்தார். இப்படி வேடிக்கை பார்த்துக் கொண்டே அவர் பாட்டுக்கும் அதிக தூரம் போய்விட்டார். திரும்பி வருவதற்கு வழி தெரியவில்லை. அது மட்டுமில்லை அவர் தங்கியிருக்கின்ற ஹோட்டல் எது என்பதையும் மறந்து விட்டார்.

வழியிலே போறவர்கள் வருகின்றவர்களையெல்லாம் நிறுத்தி சேர் நான் தங்கியிருக்கின்ற ஹோட்டல் எது என்று உங்களுக்குத் தெரியுமா என்று கேட்க ஆரம்பித்துவிட்டார். அவர்களுக்கு எப்படி தெரியும்?எல்லோரும் ஒரு மாதிரியாக இவரைப் பார்த்துவிட்டு விலகிப்போக ஆரம்பித்துவிட்டார்கள்.

ஒரு கிண்டல்க்கார ஆசாமி இவரைப் பார்த்து அது சரி உங்க பெயர் என்ன என்றாவது உங்களுக்கு ஞாபகம் இருக்கா என்று விளையாட்டாக கேட்டார். உடனே இவர் சீரியஸா அது எனக்கு ஞாபகம் இருக்கு ஐன்ஸ்டின் என்றார்.

அப்பொழுதெல்லாம் இவர் பெயர் உலகம் முழுவதும் தெரியும். அவ்வளவு புகழ். பெயரைக் கேட்ட உடனே அந்த ஆள் இவரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு பொலிஸ் உதவியோட இடத்தைக் கண்டுபிடித்து கூடவே கொண்டு போய் ஹோட்டலிலே விட்டுவிட்டு வந்தாராம்.

இது மாதிரி பெரிய மேதைகளுக்குத்தான் ஞாபக மறதி என்பது இல்லை. சாதாரண ஆளுங்களுக்கும் இது இருக்கிறது உண்டு.

நம்ம ஆளு ஒருத்தர். அவருக்கு அடிக்கடி ஞாபக மறதி.உடனே ஒரு டொக்டரைத் தேடிப் போனார்.

டொக்டர் எனக்கு ஞாபக மறதி அதிகமா இருக்கு இதுக்கு ஏதாவது மருந்து கொடுங்களேன் என்றார்.அவர் மெதுவாக இவரைப் பார்த்து. நான் டொக்டர் இல்லை வக்கீல் அப்படி என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பியனான இளவாலை சென்லூட்ஸ்




உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத்தினரால் நடத்தப்பட்ட உதைபந் தாட்ட போட்டியின் பரபரப் பான இறுதியாட்ட த்தில் இளவாலை சென்லூட்ஸ் அணி சம்பியன் கிண்ண த்தை சுவீகரித்துக் கொண் டனர்.

உடற்கல்வி டிப்ளமோ ஆசிரியர் சங்கத்தினரால் நடத்த ப்பட்ட வடமாகாண அணிகளுக்கு இடையி லான உதைபந் தாட்ட போட்டியின் இறுதியா ட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை உரும்பிராய் இந் துக் கல்லூரி மைதான த்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் இள வாலை சென்லூட்ஸ் அணியை எதிர்த்து யாழ் சென்மேரிஸ் அணி மோதி யது.

இடைவேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இரு அணிகளும் சமபலத் துடன் மோதினர்.

இருப்பினும் 14 ஆவது நிமிடத் தில் இளவாலை சென் லூட்ஸ் அணி வீரர் ரொனிக் ஒரு கோலைப் போட இடை வேளைக்கு முன்னரான ஆட்டத்தில் இளவாலை சென்லூட்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்திலும் இரு அணிகளின் ஆட்ட மும் அனல் பறந்தது. இதில் சென்மேரிஸ் அணி க்கு நேர் உதை கிடை த்தது. இதனை அவ்வணி வீரர் தட்டிக் கொடுக்க நித ர்சன் கோலாக மாற்றி சென்லூட்ஸ் அணிக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடு த்தார். அதன் பின்னர் இரு அணிகளும் பல முறை முயற்சித்த போதி லும் மேலதிக கோல் எதனையும் பெற முடிய வில்லை.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மா னிக்கப்பட்டது. இதில் சென்லூட்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரி த்துக் கொண்டனர்.

உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ப.தர்மகுமாரன் தலைமையில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப் பாளர் ஜோண்.குயின்ரஸ், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப் பாளர் க.குமாரசாமி மற் றும் வலிகாம லீக்கின் செயலா ளர் யசிந்தன் ஆகியோரும் கலந்து சிறப்பித்து பரிசில்களை வழங்கினர். (நி-6-90)







## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3106

மதுமிதா




கீர்த்தனா




சுஜித்தா




நாகேஷ்




சர்வதயாளன்




யுகேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 471





கோடிக்கரை சென்று, பிறகு கடற்கரையோரமாகத் தானே போகவேண்டும்?" என்றான் கலபதி.

ஆனால் வாயுபகவானுடைய திருவுள்ளம் வேறுவிதமாயிருந்தது. வரவரக் காற்றின் வேகம் குறைந்து வந்தது. உச்சி வேளை ஆனதும் காற்று அடியோடு நின்று விட்டது. கடல், அலை என்பதே இன்றி அமைதியடைந்திருந்தது. சொல்ல முடியாத புழுக்கம் சூழ்ந்தது. சூரியபகவான் வானத்தில் ஜோதிப் பிழம்பாக விளங்கிக் கடல் மீது தீயைப் பொழிந்தார்! கடல் நீர் தொட்டுப் பார்த்தால் சுட்டிராதுதான். ஆயினும் கடலைப் பார்க்கும்போது தண்ணீர்க் கடலாகத் தோன்றவில்லை நன்றாகக் காய்ச்சிக் கொதித்துப் புகை எழும்பும் எண்ணெய்க் கடல் போலத் தோன்றியது. சூரிய கிரணங்கள் நேரே பிரதிபலித்த இடங்களில் உருக்கிய அக்கினிக் கடலாகவும் காணப்பட்டது.

கப்பல் அசையவில்லை பாய்மரங்களிலிருந்து எல்லாப் பாய்களும் நன்றாக விரிக்கப்பட்டிருந்தன. பயன் என்ன? அலை ஓசை நின்றது போல் பாய்மரங்கள் படபட வென்று அடித்துக் கொள்ளும் ஓசையும் நின்றுவிட்டது. பாய்மரங்களும் தூண்களும் குறுக்கு விட்டங்களும் அசையும்போது ஏற்படும் கறமுற சப்தமும் இல்லை. கப்பல் கடலைக் கிழித்துச் செல்லும் ஓசையும் இல்லை. உண்மையில் அந்த நிசப்தம் சகிக்க முடியாத வேதனையை அளித்தது.

அத்துடன் இளவரசரின் உள்ளத்தில் வந்தியத்தேவனைப் பற்றிய வேதனையும் மிகுந்தது.

"இப்படிக் காற்று நின்று கப்பலும் அடியோடு நின்றுவிட்டதே! இப்படியே எத்தனை நேரம் இருக்கும்! காற்று எப்போது மறுபடி வரும்? அந்தக் கப்பல் தப்பித்துக்கொண்டு போய் விடாதா?" என்று கவலையுடன் கேட்டார்.

பார்த்திபேந்திரன் நாவாயின் நாயகனை நோக்கினான்.

அப்போது கலபதி, "அதிக நேரம் இப்படியே காற்று அடியோடு ஓய்ந்து இருக்க முடியாது. சுழிக்காற்று எங்கேயோ உருவாகிக் கொண்டிருக்கிறது. சீக்கிரத்தில் அதுவந்து நம்மைத் தாக்கினாலும் தாக்கும் அல்லது நம்மை ஒதுக்கி விட்டுவிட்டு அப்பால் போனாலும் போய் விடும். நம்மைச் சுழிக்காற்றுத் தாக்கினாலும், தாக்காவிட்டாலும் கடல் சீக்கிரத்தில் கொந்தளிக்கப் போவது நிச்சயம். இப்போது இவ்வளவு அமைதி குடி கொண்டிருக்கிறதல்லவா? இன்று இரவுக்குள் மலை போன்ற அலைகள் எழுந்து மோதுவதைப் பார்ப்போம், மலைகளையும் பார்ப்போம் அதல பாதாளத்தையும் பார்ப்போம்!" என்றான். "சுழிக்காற்று கப்பலைத் தாக்கினால் அபாயந்தான் அல்லவா?"

"சாதாரண அபாயமா? கடவுள் காப்பாற்றினால் தான் உண்டு!"

"அப்படியானால் அந்தக் கப்பலை நாம் பிடிப்பது துர்லபம்."

"இளவரசே! கடலும் காற்றும் பட்சபாதம் காட்டுவதில்லை. நமக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமைதான் அந்தக் கப்பலுக்கு ஏற்பட்டிருக்கும். தற்சமயம் அதுவும் அசையாமல்தான் நிற்கும்." "ஒருவேளை கரையோரம் சென்றிருந்தால்" என்று இளவரசர் கேட்டார்.

"கரையோரம் போயிருந்தால் அதில் உள்ளவர்கள் இறங்கிக் கரைசேர்ந்து தப்பிக்கலாம்! ஆனால் கப்பல் போனதுதான்!" என்று சொன்னான் கலபதி.

"எவ்வளவு பெரிய அபாயமாயிருந்தாலும் நமக்கு வேண்டியவர்கள் நம் பக்கத்திலிருந்தால் கவலையில்லை!" என்றார் இளவரசர். அவருடைய மனக்கண் முன்னால் வந்தியத்தேவனுடைய குதூகலம் ததும்பும் முகமும், பூங்குழலியின் மிரண்ட பார்வையுடைய முகமும் அடிக்கடி வந்து கொண்டிருந்தன.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கிழவர் கேட்ட கேள்வி!

(நேற்றைய தொடர்ச்சி)

எனவே, அக்குடும்பத்திற்கு எதிராக செயற்பட பயந்தான். இருப்பினும் தன் மனைவியை திருப்திபடுத்த வேண்டும் என்பதற்காக பாணபத்திரரின் மனைவியை பழி வாங்க நினைத்தான்.

அச்சமயத்தில் ஈழ நாட்டு பெண் ஒருத்தி இசைக் கலையில் பெரும்புகழ் பெற்றிருந்தாள். எனவே, அவளை அழைத்து வந்து நாட்டில் இசைக் கச்சேரி வைத்தான். கச்சேரி முடிவில், "என்னுடன் போட்டியிட யார் தயார்?" என்றாள்.



அப்படி கேட்க வைத்ததும் மன்னர் தான். உடனே மன்னன் பாணபத்திரரின் மனைவியைப் பார்த்து, "அம்மையீர்! நீங்கள் தான் நம் நாட்டின் பெருமையை நிலைநாட்ட முடியும்!" என்றான்.

"பணம், புகழுக்காக இல்லை. நாட்டின் பெருமைக்காக கலந்து கொள்கிறேன்!" என்றார்.

உடனே போட்டியின் திட்டங்களை மன்னன் அறிவித்தான்.

"மூன்று நாட்கள் போட்டி நடைபெறும். [illegible] இறுதியானது. ஈழ நங்கை வெற்றி பெற்றால் அரசவைக் கலை ஞராக்கப்படுவார். பாணபத்திரரின் மனைவி தோற்றால் நாடு கடத்தப்படுவார்" என்றான்.

முதல் நாள் போட்டி தொடங்கியது. ஈழ மங்கையின் இசை அவ்வளவு சிறப்பாக இல்லை என்றாலும் அரசரின் கட்டளைப்படி அவளே சிறந்த இசை வழங்கியதாக அறிவிக்கப்பட்டது. இரண்டாவது நாளும் தீர்ப்பு இப்படியே வழங்கப்பட்டது.

பாணபத்திரரின் மனைவி, மன்னன் தனக்கெதிராக போட்டுள்ள சதித்திட்டம் என்பதை புரிந்து கொண்டு இறைவனிடம் கூறி அழுதாள்.

"இறைவா நீ தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்!" என்று முறையிட்டாள்.

மூன்றாவது நாள் போட்டி தொடங்கியது. திட்டமிட்டபடியே ஈழத்து மங்கை தான் சிறப்பாக இசைத்ததாக தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது மக்கள் கூட்டத்தில் இருந்து முதியவர் ஒருவர் எழுந்து நின்றார்.

"மன்னா! இந்த எளியவன் சில வார்த்தைகள் பேசலாமா?"" என்றார்.

"பேசுங்கள்!" என்றான் மன்னன்.

"நடுவர்களே... எந்த அடிப்படையில் ஈழமங்கையின் இசைதான் சிறந்தது என்று தீர்ப்பு வழங்கினீர்கள்?" என்றார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றோர் என்பவர்கள் குறைகளை அறியாதவர்கள் அல்லர். குறைகள் இருந்தும் அவற்றைத் திருத்திக்கொண்டு குணங்களை உண்டாக்கிக் கொண்டவரே சான்றோர் ஆவர். – ஓர் அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிவில் சமூகம் என்ற பேரால் தீர்மானங்கள் எடுக்கப்பட்டால்...

கடந்த 30.04.2024 அன்று வவுனியாவில் கூடிய சிவில் சமூகம்; எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இவ்விதம் சிவில் அமைப்புகள் கூடித் தீர்மானம் எடுப்பது நல்ல விடயம்.

பொதுவில் சிவில் சமூகம் ஒன்றுகூடி எடுக்கின்ற தீர்மானங்கள் பொதுமக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் என்ற நிலைப்பாடு உண்டு.

அவ்வாறு சிவில் சமூகம் ஒன்றுகூடித் தீர்மானம் எடுப்பதென்பதற்குள், அதில் பங்குபற்றிய சிவில் அமைப்புகளின் எண்ணிக்கையும் அவற்றின் பங்கேற்புப் பிரதிநிதித்துவமும் மிகவும் முக்கியத்துவம் பெறும்.

எனினும் தமிழ் மக்கள் சார்ந்த எல்லா விடயங்களையும் சிவில் சமூகம் கூடி முடிவெடுக்க முடியுமா? என்றால் அதற்கான பதில் இல்லை என்பதுதான்.

ஆம், சிவில் சமூகம் என்பது தனித்து பொதுமக்கள் சார்பில் தீர்மானம் எடுக்கின்ற அமைப்புகள் மட்டுமல்ல.

அந்த அமைப்புகள் பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து அதன் அடிப்படையில் தீர்மானத்தை எடுக்கின்ற கடமைப்பாட்டையும் கொண்டுள்ளன.

எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை தனித்து சிவில் சமூகம் மட்டும் எடுக்க முடியாது.

ஏனெனில் குறித்த விடயம் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த அரசியல் மற்றும் சமூக – பொருளாதார விடயங்களையும் எமது புலம்பெயர் உறவுகளுடனான தொடர்பாடலுடனும் சம்பந்தப்பட்டது.

ஆகையால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை தமிழ் மக்களே தீர்மானிக்க முடியும்.

அதாவது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதா? இல்லையா? என்பது குறித்த தீர்மானம் தமிழ் மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் அபிப்பிராயங்களையும் உள்வாங்கி எடுக்கப்பட வேண்டியது.

அவ்வாறான ஏற்பாடுகள் செய்யப்படுமாக இருந்தால், அதன் முதற்கட்டமாக எமது புத்திஜீவிகளுடனும் பல்கலைக்கழக மாணவர்களுடனும் நாம் கலந்துரையாடலை நடத்தியிருக்க வேண்டும்.

அத்துடன் ஒவ்வொரு சிவில் சமூக அமைப்புகளும் தாம் தாம் பிரதிநிதித்துவம் செய்கின்ற மக்கள் குழுமத்தைச் சந்தித்து, அவர்களின் கருத்துக்களைப் பதிவு செய்து, அதனடிப்படையில் தமது அமைப்பின் தீர்மானத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இதைவிடுத்து சிவில் சமூகம் என்ற பேரில் ஓர் இடத்தில் கூடி தீர்மானம் எடுத்து அதனைப் பொதுமைப்படுத்தி வெளியிடுவதென்பது தமிழ் மக்களுக்கு எதுவும் தெரியாது. நாங்கள் நினைப்பதுதான் இங்கு நடக்கும் என்பதாக நிலைமை அமையும்.

ஆகையால், ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தரப்பு எந்தத் தீர்மானத்தையும் எடுக்கலாம்.

ஆனால் அது தமிழ் மக்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் நம் தாழ்மையான கருத்து.

# காங்கேசன்துறை - நாகப்பட்டினம் பயணிகள் கப்பல் சேவை

- 13 ஆம் திகதி ஆரம்பமாவது உறுதி
- இரு வழி கட்டணமாக ரூ 34,200
- ஒரு பயணி 60 கிலோ பொருட்கள் எடுத்துச் செல்லலாம்

காங்கேசன்துறை மற்றும் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவையை எதிர்வரும் 13ஆம் திகதி முதல் மீள ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக படகுசேவை தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சோ.நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

40 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியா - இலங்கை இடையிலான பயணிகள் கப்பல் சேவைகளை மீள ஆரம்பிக்கும் வகையில் நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவையை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஒக்ரோபர் 14 ஆம் திகதி ஆரம்பித்து வைத்தார்.

எனினும், இந்த சேவையைத் தொடர்வதில் இயற்கையான தொழில்நுட்ப விடயங்கள் சில தடைகளாக அமைந்திருந்தன. இந்நிலையில் தற்போது படகுசேவை எதிர்வரும் 13ஆம் திகதி முதல் மீளவும் தொடரவுள்ளது.

நாகப்பட்டினத்துக்கும், காங்கேசன் துறைக்கும் இடையிலான கப்பல் சேவைக்காக "சிவகங்கை" எனும் கப்பல் பயன்படுத்தப்படவுள்ளது. 150 பயணிகள் பயணிப்பதற்கான வசதிகளைக் கொண்ட இந்த கப்பலில் பயணிப்பதற்கு இருவழி கட்டணமாக வரிகள் உள்ளடக்கப்பட்டு 34,200ரூபாவை (8400 இந்திய ரூபா) அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கப்பலில் பயணிக்கும் பயணியொருவர் 60 கிலோகிராம் எடையுடைய பொருட்களை எடுத்துச் செல்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது. எவ்வாறாயினும், பொதியொன்றின் எடை 20 கிலோகிராமுக்கு உட்பட்டதாக அமைய வேண்டியது வரையறுக்கப்பட்ட விடயமாக உள்ளது.

இதேவேளை, கப்பலின் மேற்தளத்தில் கடற்பரப்பினை பார்த்து இரசித்துச் செல்லும் வகையில் பிறீமியர் ஆசன ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இது விசேட அதிதிகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை மையப்படுத்தியதாகும். அதற்காக விசேட கட்டணமும் அறவிடப்படவுள்ளதோடு பயணி ஒருவரின் பொதி எடையிலும் மாற்றங்கள் காணப்படும்.

மேலும், இந்தப் படகு சேவையானது காலம் தாழ்த்தப்பட்டமைக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும், உண்மையில் நாகப்பட்டினத் துறைமுகத்தினைப் பயன்படுத்துவதற்கான கட்டணத்தொகையை பயணிகளிடத்திலிருந்து அறவிடுவதற்கு தமிழக அரசாங்கம் முன்மொழிந்திருந்தது.

எனினும் அத்தொகையை பயணிகளின் பயணத்தொகையுடன் இணைக்கின்றபோது அது மேலும் அதிகரிப்பதற்கான நிலைமைகளே காணப்பட்டன.

இதனால் குறித்த விடயம் இந்திய மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதை அடுத்து, கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அவதானிப்புக்களுக்கு அமைவாக நாகப்பட்டினத் துறைமுகப் பயன்பாட்டுக் கட்டணத்தை மத்திய அரசாங்கம் மானியமாக வழங்குவதற்கு தீர்மானித்துள்ளது.

அந்த வகையில் மாதந்தோறும் 72இலட்சம் ரூபா துறைமுகப் பயன்பாட்டுக்கட்டணமாக மத்திய அரசாங்கம் 12மாதங்களுக்கு தமிழக அரசாங்கத்துக்கு வழங்கவுள்ளது. அந்த வகையில் மத்திய அரசாங்கத்தின் மேற்படி செயற்பாட்டின் காரணத்தினாலேயே தற்போது கப்பல் சேவை சாத்தியமாகியுள்ளது. அதற்கு மத்திய அரசாங்கத்துக்கு விசேடமாக எமது நிறுவனம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது என்றார்.(ம-7,10,33)

# நான் மைத்திரியின் காவலன் அல்ல சுதந்திரக் கட்சியை மீட்பதே இலக்கு நீதி அமைச்சர் விஜயதாச

(கொழும்பு)

நான் மைத்திரிபால சிறிசேனவின் காவலன் அல்ல. சிறிலங்கா சுதந்திரக் கட்சியை மீட்கவே வந்துள்ளேன் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் கட்சியைப் பலப்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது நான் பதவிகளுக்காகச் சண்டையிடுபவன் அல்ல.சுதந்திரக் கட்சியைக் கைப்பற்றும் நோக்கமும் கிடையாது.

கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கிலேயே பதவியை ஏற்றேன்.இதன் பின்னணியில் வேறு சூழ்ச்சி எதுவும் இல்லை.

சுதந்திரக் கட்சியில் உள்ள எந்தவொரு தரப்புடனும் எனக்குப் பிரச்சினை இல்லை. நிமல் சிறிபால டி சில்வா, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்டவர்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளேன்.

எனவே அனைவரும் ஒன்றிணைந்தால் கட்சியைப் பலப்படுத்தலாம். கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடத்தயார் என்றார்.(ம-7,10)

## பாரவூர்தி - மோ. சைக்கிள் வவுனியாவில் விபத்து

### பொலிஸ் உத்தியோகத்தர் காயம்

(வவுனியா)

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற பாரவூர்தி - மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பாரவூர்தியுடன் பொலிஸ் உத்தியோகத்தர் செலுத்திச்சென்ற மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளினை செலுத்திச் சென்ற நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் காயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்து இடம்பெற்ற இடத்திற்கு சென்ற வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தமையுடன் பாரவூர்தியின் சாரதியினையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் இரு வாகனங்களையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகைகளுக்கான அறிவித்தல்
## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்
## வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த வழங்குவதற்கான பெறுகைகள்
### 2024.07.01 தொடக்கம் 2025.06.30 வரை

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்குத் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்கவேண்டிய நிலையம் | கேள்வி உத்தரவாதமுறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2024/ 01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) | 25,000.00 |
| 02. | D/JF/2024/02 | உலர் உணவுவழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 260,000.00 |
| 03. | D/JF/2024/03 | | பிரதேச வைத்தியசாலை, வல்வெட்டித்துறை | 60,000.00 |
| 04. | D/JF/2024/04 | | ஆதாரவைத்தியசாலை, சாவகச்சேரி | 260,000.00 |
| 05 | D/JF/2024/05 | | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | 45,000.00 |
| 06 | D/JF/2024/06 | | ஆதாரவைத்தியசாலை, ஊர்காவற்துறை | 150,000.00 |
| 07 | D/JF/2024/07 | | பிரதேசவைத்தியசாலை, நெடுந்தீவு | 20,000.00 |
| 08 | D/JF/2024/08 | | பிரதேசவைத்தியசாலை, அச்சுவேலி | 40,000.00 |
| 09 | D/JF/2024/09 | | பிரதேசவைத்தியசாலை, கோப்பாய் | 70,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் /சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகைமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 -பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, 572/3 வைத்தியசாலை வீதி யாழ்ப்பாணம்** எனும் முகவரியிலும் 021222 6253, 021221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்க முடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை **பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் 06.05.2024 ஆம் திகதி முதல் 22.05.2024 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 27.05.2024 அன்று காலை10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 15 ஆம் திகதி மே மாதம் 2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும். என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**
**021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-9971**
**மின்னஞ்சல்: rdhsjaffna 15@gmail .com**

# வசிம் அக்ரம் இலங்கை வருகை



(கொழும்பு)

பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வசிம் அக்ரம், உலகக் கிண்ணத்தை இலக்காகக் கொண்ட இரண்டு நாள் பயிற்சி நிகழ்ச்சிகளுக்கு தலைமை தாங்குவதற்காக இலங்கை வந்தடைந்துள்ளார்

இந்த நிகழ்ச்சித் தொடர் இலங்கையின் தேசிய மட்ட வீரர்கள், தேசிய வேகப்பந்து வீச்சாளர், மேம்பட்ட திறமை நிலையத்தின் பயிற்சியாளர்கள் மற்றும் முக்கிய கழகங்களுக்கிடையிலான விளையாட்டு அணிகளின் பயிற்றுவிப்பாளர்களை இலக்காகக் கொண்டதுடன், இதன் கீழ் 5 பயிற்சி அமர்வுகளும். திட்டமிடப்பட்டுள்ளன.

உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியின் தயாரிப்பு நடவடிக்கைகளில் வசிம் அக்ரம் கவனம் செலுத்துவார் என இலங்கை கிரிக்கெட் நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (நி-6)

# உமாஓயா திட்டத்தினால்
## நாளொன்றுக்கு 80 மில்லியன் ரூபாய் சேமிப்பு

(கொழும்பு)

உமாஓயா அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மின்சாரசபைக்கு நாளொன்றுக்கு 80 மில்லியன் ரூபாய் சேமிக்கப்படும் என அதன் திட்டப் பணிப்பாளர் சுதர்ம எலகந்த தெரிவித்துள்ளார்.

உமாஓயா திட்டத்தினால் இதுவரை சுமார் 1,500 மில்லியன் ரூபாய் சேமிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் சுமார் ஒரு மாத காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஆகியோரின் தலைமையில் குறித்த திட்டம் அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

2007 நவம்பர் 27ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் 2008 ஏப்ரல் 21ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# இராமர் பாலம் வேலைத்திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும்
## சந்தோஷ் ஜா உறுதி



(மட்டக்களப்பு)

இராமர் பாலம் அமைப்பது தொடர்பான வேலைத்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன் இடைநிறுத்தப்பட்ட இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மட்டக்களப்பு - காந்திபூங்காவில் உள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து வழிபட்டார்.

மேலும் எதிர்வரும் காலத்தில் மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் நோக்கிய தொடருந்து சேவையினை விஸ்தரிப்பதற்கு எதிர்காலத்தில் இந்தியா நடவடிக்கையெடுக்கும் என்று உறுதியளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், மட்டக்களப்பு மாநகரசபையின் ஆணையாளர் என்.சிவலிங்கம், மாநகரசபையின் முன்னாள் பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல இலட்சம்...

பெறுமதி கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய் எனவும் கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கையினை வவுனியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10,250)

## வடமராட்சியில்...

செய்யப்பட்டுள்ளனர்.

ஒளிபாய்ச்சி குறுகிய கண்களை கொண்ட (சுருக்குவலை) வலையை பயன்படுத்தி மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டதால் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வெற்றிலைக்கேணி கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட நபர்கள் கட்டைக்காட்டைச் சேர்ந்தவர்கள் என்பதோடு உடைமைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (ம-7,10)

## 'இந்த நாடு...

பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது முகநூலில் பதிவிட்டதாவது,

கடந்த வியாழக்கிழமை காலை 7 மணியளவில் கொழும்பு பொரளை பேஸ்லைன் வீதியால் இப்பேருந்து சென்று கொண்டிருந்தபோது இந்த வாசகத்தை எனது கையடக்கத் தொலைபேசி கமராவால் புகைப்படம் எடுத்தேன்.

அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது இந்த வாசகம் எழுதப்பட்டிருந்த இப்பேருந்து என் கண்ணில் தென்பட்டது.

2009 யுத்தத்திற்கு பின்னர் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பது சவாலான ஒன்றாகவே காணப்படுகின்றது. இதற்குக் காரணம் இந்த கடும் போக்கு சிந்தனைகள் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அரசியல்வாதிகளும், மதத் தலைவர்களும் வெளிப்படையாகவே தங்களின் கடும்போக்கு சிந்தனையை மக்கள் மத்தியில் விதைக்கின்றனர்.

அந்தச் சிந்தனைகளால் ஈர்க்கப்படும் பொதுமக்களும் தமது எண்ணங்களை பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றனர். இதனை தலைநகர் கொழும்பில் பயணிக்கும் சில வாகனங்களில் காணமுடிகின்றது என்றுள்ளது. (ம-7,10)

## லிட்ரோ எரிவாயு...

நிறைகொண்ட எரிவாயு கொள்கலன்களின் விலையை 4000 இற்கும் குறைவாக நிர்ணயிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை முதல் அமுலாகும் வகையில் இந்த விலை குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-7,10)

## பெண்ணின்...

மேலும் தெரியவருவதாவது,

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் அரசினர் வைத்தியசாலையை அண்மித்த பகுதியிலுள்ள தென்பெருந்துறை சதானந்தசிவன் ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், ஆலய சூழலில் கிடங்கொன்றினை வெட்டிய போது, மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் அண்மையில் வெளிவந்தன.

இதனையடுத்து குறித்த கிடங்கு வெட்டும் பணிகளை இடைநிறுத்தி அது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்ட நிலையில் நேற்று நீதிமன்றத்தின் அனுமதியுடன் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி சுபாகரன், சட்ட வைத்திய அதிகாரி செ.பிரணவன், தொல்லியல் துறை அதிகாரி மணிமாறன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள், பொலிஸார், தடயவியல் பொலிஸார் முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

அகழ்வின்போது பெண்ணொருவரினுடையதாக கருதப்படும் எலும்புக்கூடு முழுமையாக மீட்கப்பட்டது. எலும்புக்கூட்டுடன் செப்பு நாணயங்கள், துணி, அரிசி துகள்கள் என்பனவும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதி முன்னைய காலத்தில் மயானமாக இருந்திருக்கலாம் என்றும் குறித்த பெண்ணின் உடல் இந்து முறைப்படி கிரியை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

இந்நிலையில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு மற்றும் ஏனைய சான்றுப் பொருட்களைப் பார்வையிட்ட நீதவான் இது தொடர்பான பகுப்பாய்வு பரிசோதனையை நடத்தி அறிக்கையை சமர்ப்பிக்க சட்ட மருத்துவ அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

இதனையடுத்து அப்பகுதியில் அகழ்வுப் பணிகள் நிறைவுக்கு வந்ததுடன் மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடு மற்றும் சான்றுப் பொருட்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## இரண்டு வீடுகள்...

தென்மூலைப் பகுதியில் குறித்த தாக்குதல் நேற்று நடத்தப்பட்டுள்ளது.

பெற்றோல் குண்டுகள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7,10,33)

## சடலமாக மீட்கப்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அரைக்கும் ஆலைக்கு அண்மையிலுள்ள அவர்களின் வீடொன்றில் அவரது சடலம் காணப்பட்டுள்ளது.

நேற்று மதியம், தகவலறிந்து அங்கு சென்ற மனைவி சடலத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்துள்ளார். உடனடியாக வீட்டுக்குச் சென்ற அவர் நஞ்சருந்தியுள்ளார். அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும், வழியில் உயிரிழந்தார்.

வேதாரணியம் லோகநாதன் (வயது-45), லோகநாதன் பரமேஸ்வரி (வயது-37) ஆகியோரே உயிரிழந்தனர். அவர்களுக்கு 3 பிள்ளைகள் உள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ம-7,10)

## அதிக...

எச்சரிக்கை நிலை" வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்காரணமாக, பொதுமக்கள் அதிக நீரை அருந்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வெடுக்கவும் மற்றும் கடினமான வெளிப்புற நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இலகுரக மற்றும் வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடைகளை அணியுமாறு திணைக்களத்தினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.(ம-7,10)

## யாழ்.கோட்டை...

ஆளுநர் செயலகத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின்போதே ஆளுநர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

யாழ்.கோட்டையின் உட்புறம் மற்றும் வெளிப்புறச் சூழலை, சுற்றுலாப் பயணிகளை கவரும் வண்ணம் அழகுபடுத்த தேவையான திட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் ஆளுநர் தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் தொல்பொருள் திணைக்களம் ஆகியன இணைந்து புதிய திட்டங்களை வடிவமைக்குமாறும், அதற்கான அனுமதியை மத்திய அமைச்சு மற்றும் துறைசார் திணைக்களங்களிடம் பெற்று அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார். (ம-7,10,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 5463
D 0 3 6 9 6 6
அத சம்பத
D 6 9 6 6
சீட்டிழுப்பு இலக்கம் 038
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.05.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1493
P 43 50 71 73 P
Double Chance 24285

மெகா பவர்
திகதி 02/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1811
Z 21 43 48 63 65
92041

லக்கி 7 VIP
திகதி 2024.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 0289
D 3 4 8 2 2 8 D

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3705
சீட்டிழுப்பு திகதி 02.05.2024
Y 15 31 38 74
Y 81444
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.02
சீட்டிழுப்பு இலக்கம் 0772
கடகம் 04 14 17 32 கடகம்
28015 22

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.05.2024 வெற்றி வாரம் 171 வர்ணம் மஞ்சள்
V 9 2 6 5 1 5
M 84900
அடுத்த சுப்பர் ஜக்பொட் 21,526,616.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2437 வர்ணம் பச்சை 02.05.2024 தினம் வியாழன்
04 07 13 62 N
60417
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 86,228,168.80
DLB

சனிதா
திகதி 2024.05.02 வெற்றி வாரம் 4598 வர்ணம் சிவப்பு
07 48 58 64 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,574,877.20
61481
DLB

சீட்டிழுப்பு வாரம் 4149 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.02 தினம் வியாழக்கிழமை
13 25 44 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,727,426.00
853512
DLB

R 06 04 21 51 74
சீட்டிழுப்பு 1613
454960
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 520,444,549.80
02.05.2024 வியாழன்
DLB

வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2263
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 110,067,331.20
சீட்டிழுப்பு திகதி : 2024.05.02
அட கோடிபதி ADA KOTIPATHI
28 60 74 76 R
380893
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி




மண்ணில் 1962.03.26

விண்ணில் 2022.04.25

## அமரர் கணேசு நடராசா

(உரிமையாளர் – நெல்லியடி ஹப்பி ரெக்ஸ்ரைல்)



ஈராண்டு ஓடி மறைந்தது ஐயா!
உங்கள் அன்பு நிறைந்த முகம்
எம் நெஞ்சங்களை விட்டகலவில்லை!

அன்பென்ற வார்த்தைக்கு
அர்த்தம் தேடினால் அது நீங்களே!
புன்னகை கலந்த உங்கள் அன்பு முகத்தை
இனி எப்போது காண்போம்?

ஈராண்டென்ன?
ஈராயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
நீங்கள் எம் நெஞ்சங்களில்
நிலையாய் வாழ்வீர்கள் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

(C-0261)

நெல்லியடி

சகோதரர்கள்
077 832 9458, 078 123 4666

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org